841

Registered No. M. 1926

௳

கடவுள் துணை.

தர்மபோதினி.

தர்மபுரி என்னும் தலத்தினின்றும் மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம், அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை"—திருக்குறள்

தொகுதி 1 Vol 1 | இரக்தாக்ஷி-ஆ ஐப்பசி-மீ OCTOBER 1924. | பகுதி 7 No. 7

உள்ளுறை

		பக்கம்.
1.	கடவுள் வணக்கம்	193
2.	தொழிற்சாலைக்கூலிகளின் நிலைமை	194
3.	நாராயணவென்ற நாமத்தின் மகிமை	198
4.	முழுமுதற் கடவுள்	199
5.	ஸ்ரீ ஜகத்குரு மகாத்மியம்	203
6.	பிறப்பு இறப்பு	206
7.	கிராம வாழ்க்கை	211
8.	மணம் III	214
9.	ஔவை அனுபவங்கள்	218
10.	கணிதவினாவிடை	221
11.	குறிப்புகள்	222
12.	மதிப்புரை	224

"தர்மபோதினி"

ஏஜெண்டுகள் தேவை! தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்!!

தெய்வபக்தி நல்லுணர்ச்சி, கல்வி, நாகரீகம், சரித்திர ஆராய்ச்சி, இயற்கை ஞானம் ஆகிய அருமையான விஷயங்களடங்கிய ஓர் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை. சந்தா தொகையை முன்பணமாக அனுப்பவேண்டும். அல்லது வி.பி மூலமாய் முதல் சஞ்சிகையை ஒரு வருஷ சந்தாவைச்செலுத்திப் பெற வேண்டும். வருஷ சந்தாவை மணிஆர்டர்செய்து பத்திரிகையைத் தருவித்துக்கொள்வது லாபகரமானது.

வி. பி. செலவு பிரத்தியேகம்.

உள்ளூர் வாசிகளுக்கு வருஷ சந்தா	ரூ.	1	4	0
வெளியூர் வாசிகளுக்கு	,,	1	8	0
வெளிநாடுகளுக்கு	,,	2	8	0
தனிப்பிரதி	,,	0	3	0
ஜீவிய சந்தா	,,	25	0	0

பத்திராதிபர், தர்மபோதினி, தர்மபுரி.

அறிவிப்பு.

வியாபாரிகளே!

உங்கள் சரக்குகள் நாடெங்கும் பரவி நல்ல லாபம் கொடுக்க "தர்மபோதினி"யில் விளம்பரஞ் செய்யுங்கள். சொற்ப செலவில் வெகுதூரத்திலுள்ளவர்களுக்கும் உங்கள் சரக்குகளைப்பற்றி அறிவித்து வியாபாரத்தை விருத்தி செய்து கொள்ள ஏற்ற சாதனம்.

விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்,
"தர்மபோதினி"
தர்மபுரி, சேலம் ஜில்லா

உ

கடவுள் துணை.

தர்மபோதினி.

—:0:—

தெய்வபக்தி, நல்லுணர்வு, கல்வி, நாகரீகம், இயற்கைத் தத்துவங்கள், சரித்திர ஆராய்ச்சி, இலக்கண இலக்கிய நுட்பங்கள், முதலியவற்றுடன் வெளிவந்துலாவும் ஓர் உயர்ந்த மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 1 } Vol 1 } இரக்தாக்ஷி-ஸூ ஐப்பசி-மீ OCTOBER 1924. { பகுதி 7 { No. 7

ஸ்ரீ கணேசர் துதி.

தருணமா துமைமுகத் தாம ரைக்கெழு
மருணனு மெனவுதித் தடியர் பாற்புரி
கருணைமா மதமெனக் காட்டு மாமுகன்
சரணவா ரிசமலர் தலையிற் கொள்ளுவாம்.

(சிவப்பிரகாசர்.)

அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறா
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்து மாகிப்
பகவர்னவெல் லாமாகி யல்ல வாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாந்
தோயாத அறிவாகிச் சுத்த மாகி
நிகரில்பசு பதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல் செய்வாம்.

(தாயுமானவர்.)

தொழிற்சாலைக் கூலிகளின் நிலைமை.

முதலாளிகள் ஒருங்குசேர்ந்து, பெருந்தனத்தை முதலாக வைத்து, முக்கியமான தொழில்களை நடத்துவது நாட்டு ஜனங்களில் பலரை மிருகத்தனமுடையோராக்குகிறதென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். நாகரீகம் சிறந்து விளங்கும் எல்லாத் தேசங்களிலும், தொழிற்சாலைகளை ஸ்தாபித்ததின் பலனாக, அநேக தொழிலாளிகளுக்குத் தீரா சங்கடங்கள் நேரிடுகின்றன. தேகத்திற்கு ஆரோக்கியமான கிராமவாழ்க்கை சீர்குலைந்து போய்விட்டது. ஜன நெருக்கமுள்ள நகரங்களில் இத்தொழிலாளிகளுக்கு வசிக்க வீடுகளில்லாமல், இயந்திர சாலைகளுக்கருகிலேயே குடிசைகள் கட்டிக்கொண்டு வாழுகிறார்கள். நகரங்களில் விலை வாசியினாலும், தங்களுடைய கூலியின் குறைவினாலும் சுகாதாரத்திற்குத் தேவையான உண்டியையும் சௌகரியத்தையும் ஏற்படுத்திக்கொள்ள முடிகிறதில்லை. சில தொழில்களில் மனிதர்களையே அதிகமாகக் கூலிக்கு வைக்க வேண்டியிருக்கிறது. அவர்களுடைய தினசரி வரும்படி, மனைவி மக்களுடன் கூடி இல்லறம் நடத்தப் போதுமானதாக விருப்பதில்லை. குடி மயக்கமுள்ள கூலிகளின் பாடு இன்னும் பரிதாபகரமானது. விபசாரமென்னும் கொடிய நரகத்திற்குள் மூழ்கி, அதன் காரணமாகத் தீரா நோய்களைத் தன்னுள் கொண்டு வருந்தும் கூலியாளிகளின் சங்கியையும் அபாரமாகின்றது.

ஸ்திரீ கூலியாளிகள் படும் பாடு இன்னும் கேவலமானது. வரும்படிக் குறைவினால், இவளும் உழைக்கவேண்டியிருக்கிறாள். வருஷா வருஷம் அல்லது இரண்டு வருஷங்களுக்கு ஒருதரம், கர்ப்பந்தரித்து, வறுமையின் காரணமாக, அநேக அல்லற்படுகிறாள். பிரசவ வைத்தியம் செய்வோர் எவருமின்றித் தவிக்கிறாள். பெண்கள் குறைவாயுள்ள இடங்களில், தன் கற்பிற்கே ஹானி ஏற்படக்கூடிய நிலைமையிலிருந்து வருந்துகிறாள். சிறுவர்களின் நிலைமை இன்னும் பரிதாபகரமானது. திருப்தியாக உணவருந்திக் கல்வி பயிலும் தருணத்தில், ஏழைமக்கள் அரைப்

பட்டினியாய்க் குற்றுயிராய்க் கிடக்கிறார்கள். சுற்றிலுமுள்ளவரின் நடவடிக்கைகளைக் கைக்கொள்வது சிறுவர்களின் இயல்பாதலால், அவர்களின் மனது சுளுவில் துராப்பியாசங்களிற் செல்லுகின்றது.

இப்பாதிரியான சங்கட நிலைமை யேற்படவே, ஐரோப்பிய தேசங்களில் பொது ஜனங்கள் மனம் நொந்து முதலாளிகளைத் தங்களிடம் வேலைசெய்யும் கூலியாளிகளுக்கு வேண்டிய வசதிகளைக் கொடுத்துதவும்படி நிர்ப்பந்தித்து அதற்கனுகுணமாக அநேக சட்ட திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அத்தொழிலாளிகளுக்கு வாக்குரிமைகளுண்டு. இப்போது இங்கிலாந்தில் பிரதம மந்திரிப்பதவியை வகிக்கும் ராம்ஸே மேக்டொனல்டு தொழிற் கக்ஷியின் பிரதிநிதியே. பார்லிமெண்டு சபையில் தொழிற் கக்ஷியைச்சேர்ந்த அங்கத்தினர்களின் சங்கியையே யதிகம். ரஷ்யாதேசத்திலும், ஜர்மனி தேசத்திலும் இன்னும் இதர சில தேசங்களிலும் தொழிலாளிகள் தைரியத்துடன் நின்று, வாதாடி வாக்குரிமைகளைப் பெற்றதுமன்றி, தேசமெங்கும் தொழிற்சபைகளைத் திரட்டித் தங்கள் சௌகரியங்களைப் பெருக்கிக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். இத்தேசத்தில், அநேக இயந்திர சாலைகள் கட்டப்பட்ட காரணத்தாலும், காப்பி, தேயிலை, ரப்பர் தோட்டங்கள் ஏற்பட்ட காரணத்தினாலும் சுரங்கங்கள் வெட்டி உலோகங்களைத் தயார்செய்வதனாலும், பேனாட்டுத் தொழிற்சாலை முறைகள் இத்தேசத்திலும் அவலம்பித்து வருவதனாலும், தொழிலாளரின் நிலைமை சங்கடத்திற்குள்ளாகிவிட்டது. பம்பாய், கல்கத்தா, சென்னை, கான்பூர், ஷோலாபூர் முதலிய நகரங்களிலிருக்கும் பருத்தி இயந்திர சாலைகளில் அநேக ஆயிரம் கூலியாளிகளிருந்துவருகிறார்கள். அஸ்ஸாம், பர்மா, நீலகிரி, ஆனைமலை, சேர்வராயமலை முதலிய குன்று பிரதேசங்களில், அநேக கூலியாளிகள் தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டங்களில் வேலைசெய்து வருகிறார்கள். கோலாருக்கருகிலும், ஜேம்ஷட்பூருக்கருகிலும் இன்னும் இதர இடங்களிலுமுள்ள சுரங்கங்களில் அநேகரிருக்கிறார்கள். இவற்றைத்தவிர, திருப்பூர் போன்ற பட்டணங்களில், பருத்தியைக் கொட்டை

நீக்கி, பேல்ஆகக் கட்ட அநேகர் வேலையிலமர்ந்திருக்கிறார்கள். ஆனால் இக்காலத்தில், இத்தேசத்தில் கவர்ன்மெண்டாரும், இதர ஜனங்களும் தொழிலாளிகளின் நிலைமையை விசாரித்து அவர்களின்மேலனுதாபங்கொண்டு, அவர்களைச் சீர்திருத்த அநேக முறைகளைக் கைக்கொள்ளுகிறார்கள். காங்கிரஸ்ஸைச் சேர்ந்த பலரும், இத்தொழிலாளரின் இபக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தியர்களுக்கு இயற்கையாகவேயுள்ள, அநுதாபம், பிராணிகளிடத்தில் கருணை முதலிய அரும் பெருங்குணங்களின் காரணமாக, இத்தேசத்து முதலாளிகளும், கூலியாளிகளின் கோரிக்கைகளைத் தங்களாலியன்ற மட்டும் பூர்த்தி செய்ய முயற்சிக்கிறார்கள் என்பதையும் நாம் மறக்கக்கூடாது.

எவ்விஷயத்தையாராய முன்வந்தாலும், சரியான கணக்குகளைக்கொண்டு நம் சித்தாந்தங்களை ஸ்திரப்படுத்தவேண்டுமென்பதற்கிணங்க, இத்தேசத்திய ஸ்திரீ தொழிலாளர்களைப்பற்றிச் சில குறிப்புகளைக் கூறுவோம்.

ஐரோப்பியா தேசங்களிலும், ஜப்பான் தேசத்திலும் உள்ளதைவிட, இந்தியாவில் ஸ்திரீ தொழிலாளிகளின் சங்கியை குறைந்ததே. இத்தேசத்தில், சிறுவயதில் கலியாணம் செய்துகொள்வதே இதற்கு முக்கியகாரணம். 1922-ம் வருஷத்தில் தொழிற்சாலைகளில், 12,68,000 ஜனங்கள் வேலைசெய்து வந்தார்கள். அவர்களில் 2,06,887 பேர் ஸ்திரீகள். 11,106 பேர் சிறுமிகள். 1921-ம் வருஷத்தில் சுரங்கங்களில் வேலை செய்து வந்த கூலியாளின் மொத்தம் 1,90,000. இவர்களில் 92,000 பேர் ஸ்திரீகள். 4000 பேர் சிறுமிகள். இவர்களில், நிலமட்டத்திற்குக் கீழ்ச் சுரங்கக் குழிகளில், 59,000 ஸ்திரீகள் வேலை செய்பவர்கள். இதைத்தவிர, தேயிலை, ரப்பர், காப்பித்தோட்டங்களில் 1920-ம் வருஷத்தில் வேலைசெய்து வந்த 6,50,000 கூலியாளிகளில் 2,50,000 பேர் ஸ்திரீகள். இம் மூன்று தொழில்களைத் தவிர, மூட்டை தூக்கி வயிறுவளர்க்கும் ஸ்திரீகளின் சங்கியையும், ரோட்டு வேலைகள், விவசாயம், வீட்டுவேலைகள் இவற்றிலீடுபட்டவரின் சங்கியையும் கூற முடியாது. சூரிய உதயம் முதல், சூரிய அஸ்தமனம்வரை, வீட்டு வேலைகளை இடைவிடாமல் செய்வதும், இரவிலும், தம் கணவர்களுக்கு பத்து, பனிரண்டு மணிவரை சிசுருஷை செய்வதும் ஸ்திரீகளுக்கு இளைப்பெனத் தோன்றுகிறதில்லை. ஆனால் தொழிற்சாலைகளில், 5, 6 மணி

நேரம், ஒரே இடத்தில் நின்று வேலைசெய்வது மிக்க கஷ்டமாக இறக்கிறது. கர்ப்பவதிகளின் பாடு மிக்க கேவலமாயிருக்குமென்று முன்னமே கூறியிருக்கிறோம். கர்ப்பவதியான ஏழாவது மாதம் முதல், சிசுபிறந்து, ஒன்றிரண்டு மாதம் வரை, அவர்களுக்குக் கடின வேலைகளளிக்கப்படக்கூடாது. இவர்களின் கூலியும் சேர்ந்தால்தான் ஒரு தொழிலாளித் தன் குடும்பத்திற்கு உணவு சேகரிக்கக்கூடும். இதையறிந்துதான் தொழிலாளிகளின் நலத்திற் கருத்துக்கொண்ட ஒரு கனவான், அம்மூன்று மாதங்களின் கூலியை யடைய, கர்ப்பவதியாகும் தொழிலாளி பாத்தியதை யுடையவளென்றும், அக்காலத்தில் ஏற்படக்கூடிய அவசியமான செலவுகளையும் முதலாளிகளே கொடுத்துதவவேண்டுமென்றும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. பருத்தி இயந்திரசாலைகளிலும், சுரங்கங்களிலும் வேலைசெய்யும் 3,00,000 ஸ்திரீகளில் சராசரி 30,000 ஸ்திரீகள் வருஷா வருஷம் கர்ப்பந்தரிக்கிறார்களென்று வைத்துக்கொண்டால், மாதம் ஒன்றுக்கு ஒரு ஸ்திரீக்கு 15 ரூபாய் வீதம் 3 மாதங்களுக்கு 30,000 ஸ்திரீகளுக்கு 13½ லக்ஷம் ரூபாய்ஆகிறது. தேயிலை, காப்பித்தோட்டத்துக் கூலியாளிக்கோ 1½ லக்ஷம் ரூபாய்க்கு மேலோடாது. சுமார் 15 லக்ஷம் ரூபாயை, முதலாளிகளிடமிருந்து வசூலித்தல் குற்றமுமாகாது. அவர்களுடைய லாபமுங் குறையாது. இதுவும், சிறுவர்களுக்குப் பாடசாலைகளை யேற்படுத்தல், வீடுகளைக் கட்டித்தரல் முதலிய பல சௌகரியங்களை முதலாளிகள் தாமாகவே கொடுத்துதவுவார்களென்று நம்புகிறோம்.

இந்தியத் தொழிலாளர்களுக்கு இந்தியர்களெல்லோரும் சகாயம்செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இச்சமயம், நம் தேசத்தில், ஸி. எப். ஆண்ட்ரூஸ் என்ற ஆங்கிலேய கனவான், அவர்களிடம் மிக்க அனுதாபங்கொண்டு, அவர்கள் குறைகளைத்தீர விசாரித்து, ஐரோப்பிய எஜமானர்களையும் இந்திய எஜமானர்களையும் கண்டு, அநேக முறை நம் தொழிலாளர்களுக்குச் சௌகரியங்கள் செய்து கொடுத்திருக்கிறார். அன்னார் இத்தேசத்திலன்றி, இலங்கை, மலேயா, பிஜி, பர்மா, தென்னாப்பிரிக்கா முதலிய பல்வேறு தேசங்களுக்குச்சென்று கூலிசெய்து பிழைக்கச்சென்ற இந்தியக்கூலிகளுக்காக வாதாடுகின்றார். ஆகவே, அவ்வாங்கில சிரேஷ்டருக்குக் கடவுள் தீர்க்க ஆயுளும் தேக ஆரோக்கியமுமளித்து கருணைபுரிவாராக.

——:0:——

நாராயணா வென்ற நாமத்தின் மகிமை.

[சிரோமணி T. V. ஸ்ரீகண்டசாஸ்திரிகள், ஆசிரியர்,
ஸம்ஸ்கிருதகாலேஜ், கல்லிடைக்குறிச்சி.]

கான்யகுப்ஜதேசத்தில் அஜாமிலன் என்ற ஓர் வேதியன் தன் மனைவியோடு இல்லறம் நடத்திக்கொண்டுவந்தான். ஒரு நாள் அவன் தன் தகப்பனாருடைய உத்திரவைத் தலைமேற்கொண்டு, காட்டுக்குச்சென்று பூஜைக்கு வேண்டிய புஷ்பம், பழம் முதலிய வைகளை யெடுத்துக்கொண்டு திரும்புகையில் ஹீன ஜாதியிற் பிறந்த ஓர் அழகியைக்கண்டான். உடனே அவளை மணம் (?) செய்து கொண்டு தாய் தந்தையர்களையும், மனைவியையும் விரட்டியடித்து விட்டான்.

நாளடைவில் அஜாமிளனுக்கு இழிகுல மாதிடம் பத்துப்பிள்ளைகள் பிறந்தன. அவர்களில் ஒருவன் பெயர் நாராயணன். அவனுடைய பால்ய விளையாட்டுகளைக் கண்ட பெற்றோர்கள், அவனிடம் மிக்க அன்பு செலுத்தி வந்தார்கள்.

இப்படியிருக்கும் காலத்தில் அஜாமிலனுக்கு 88 ஆண்டுகள் நிறைந்தன. அவன் பரலோகத்திற்குச்செல்லும் சமயம் நெருங்கிற்று. பயங்கர உருவத்தையுடைய மூன்று யமதூதர்கள் பாசக் கயிற்றால் கட்டி அஜாமிலனை இழுக்கும் தருவாயில், அவன், வெகு தூரத்தில் விளையாடிக்கொண்டிருந்த தன் செல்வக்குழந்தையை 'நாராயணா' வென்று கூவியழைத்தான். உடனே ஸ்ரீமந் நாராயணருடைய நான்கு தூதர்கள் பீதாம்பரதாரிகளாய் அவன் கண்களிற் தென்பட்டனர். அவர்களுக்கும் யமதூதர்களுக்கும் நடந்த சம்பாஷணையைக் கவனமாகக்கேட்டான்.

விஷ்ணுதூதர்கள் :— (யமதூதர்களைப்பார்த்து)
நீங்கள் ஏன் இந்த அஜாமிலனுடைய உயிரைப் பாசக் கயிற்றால் கட்டியிழுக்கிறீர்கள்? இவன் மகாபுண்ய சாலியல்லவா?

யமதூதர்கள் :—(திடுக்கிட்டு) ஐயா! இவன் மகாபாபி. ஒரு நாள் புஷ்பம் முதலியவற்றைக் கொண்டுவரக்காட்டிற்குச் சென்றவன், வழியில் ஓர் இழிகுல மாதை விரும்பி

மணம் செய்துகொண்டு பெற்றோர்களைக்காப்பாற்றாமல் அலக்ஷியம் செய்தனன். இவனைவிட மகாபாபிகள் உலகில் வேறொருவருமில்லை.

விஷ்ணு தூதர்கள் :— யார் பாபம் செய்தவன், யார் புண்யம் செய்தவன் என்றறியப்போதிய பகுத்தறிவு உங்களுக்கில்லையே. யாராகவிருந்தாலும் நா—ரா—ய—ண என்ற நான்கெழுத்துகளைச் சொன்னமாத்திரத்தில் எல்லா பாபங்களிலிருந்தும் விலகிவிடுகிறான். ஆகையால் இவன் மகாபுண்யவான். இவனை விட்டுவிடுங்கள்.

இவ்வாறு சொன்னதைக்கேட்ட யமதூதர்கள் போய்விடவே விஷ்ணு தூதர்களும் மறைந்தனர். அவர்களுடைய சம்பாஷணையைக்கேட்டுக்கொண்டிருந்த அஜாமிலன் தூங்கியெழுந்தவன் போல, ஆ! இஃதென்ன! கனவா? நினைவா? என் இருகண்களால் கண்ட புருஷர்கள் எங்கு சென்றனர்? என்று தன்னைத்தானே வினவினான். உடனே அவனுக்கு ஞானோதயமுண்டாக, தான் செய்த தீயச்செயல்களுக்கு மனம் நொந்து, தாய், தந்தை, மனைவி முதலியவர்களை மறுபடியுமடைந்து அவர்களிடமிருந்து மன்னிப்புப் பெற்றுக்கொண்டான். பிறகு அவன் சிறந்த பக்தனாக விளங்கினான்.

இதை வாசிக்கும் சகோதரர்களே! சகோதரிகளே! இந்தச் சிறிய கதையின் கருத்தை நன்றாக ஆராய்ந்து கடவுளது திருநாமத்தை எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருக்கவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

———:0:———

முழுமுதற்கடவுள்.

[திரு. இராமசாமி ஐயங்கார், ஆசிரியர்,
போர்டு ஹை ஸ்கூல், நன்னிலம்.]

இத்தொடராவது முழுமை, முதல், கடவுள் என்னும் மூன்று சொற்களாலாயது. கொஞ்சமும் குறைவுபடாததாயும், மாசு, மறு அற்றதாயும், ஒளியுள்ளதாயுமிருப்பதற்கு முழுமை என்ற சொல் வழங்குகிறது.

அப்படிக்கில்லாமல் கொஞ்சம் பழுறுடையதேனும், சற்று ஒளி குறைந்ததாயினும், கண்ணுக்குப்புலப்படாத மறுக்களை யுடையதாயினும், ஒருபக்கத்தில் மாசிருந்து, அது எங்கும் பரவாதிருக்குமாயினும் அதை முழுமையுடையதென்று சொல்லுகின்றோமெனின் அதனது ஏகதேசத்தையுத்தேசித்துச் சொல்லப்படுவதன்றி வேறன்று.

இப்பொழுது முழுமை என்ற பதமானது ஈறுகெட்டு முழு என்று நின்றது. முதல் என்னும் சொல்லானது தலைமை யென்று பொருள் படும். தலைமையாவது :—தான் ஒருவருக்குக் கீழ்படியாது தன்னைப் பிறர் வணங்கும்படியான தன்மையுடையது.

கடவுள் என்பது :—தெய்வமென்ற பொருளைத்தரும். இப்படி யாதொரு களங்கமுமில்லாததாயும், பிரகாசமுடையதாயும், மாசு, மறுஅற்றதாயும், கோணல் முதலாகிய குற்றங்களினின்றும் நீங்கித்தகுதியான உருவமுடையதாய் மற்றைக் கடவுளர்களால் வணங்கப்படுவதால், தான் ஒன்றையும் வணங்காததாயும், எல்லாவற்றையும் செய்ப இயல்புடையதாயுமிருக்கும் ஒரு தெய்வத்திற்கு முழுமுதற்கடவுள் என்று சொல்லப்படும்.

இப்படி, முழுமுதற்கடவுள் என்ற பெயரை உடையார், யாரென்று விசாரிப்போமாக.

உலகிலே, பிர்மாவென்றும், விஷ்ணுவென்றும், ருத்திரரென்றும், முக்கடவுளர் உண்டென்றும், அவர்களே தெய்வங்களென்றும், கூறுவார்கள். அப்படிச் சொல்லுங்கால் அவர்கள் தான் உண்மைத்தெய்வங்களா? அவர்களே யன்றி வேறு தெய்வங்களும் உண்டா? என்று விசாரிப்போம். முராரி, நாபீ, முளரிவாழ் முனியாம் நான்முகனை எடுத்துக்கொள்வோமாக.

இவரது தொழில் படைப்பு படைத்தற்கடவுளென்பர். ஆயினும் இவர் நிரந்தரமாகத்தன் தொழிலைச்செய்து வருகின்றாரா? என்று ஆராய்வோமாயின், காந்த புராணத்திலே, சூரபன்மன் அரசாட்சி செய்யுங்காலத்திலே, பிர்மன் முதலாகிய தேவர்கள் அவன் சபைக்குப்போயினர் என்றும், இவர்களை சூரன் யாரென்றும் கேட்க, விஷ்ணு, இவர்கள் மகாதேவன், அரன், ருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசான், விஜயன்,

வீமதேவன், பவோத்பவன், கயாலி, சௌமியன் எனப்பதினொரு ருத்திரர்களென்றும், இவர்கள் பிர்மதேவன் கர்வத்தை யடக்கும் பொருட்டு உமை யொருபாகனால் உண்டாக்கப்பட்டனரென்றும், இவர்கள் சென்று பிர்மனுக்கு சிருஷ்டித்தொழிலைக் கற்றுக் கொடுத்தனரென்றும், சொன்னாரென்று.படிக்கிறோம்.

அந்தே புராணத்தில், மற்றொரு இடத்தில் குகன் பிர்மதேவனைக்கண்டு உமக்கு என்ன தெரியுமென்றபோது, வேதம் தெரியுமென்று சொல்ல, முடிவையின் பொருளைச்சொல்லவேண்டுமென்று கேட்க, அவர் தெரியாது விழிக்க அவரைச்சிறையிலிட்டுத்தாமே சிருஷ்டித்தொழிலை நடத்திவந்தாரென்றும் வாசிக்கிறோம். இன்னும் பலவிதமாக பலகதைகளுமிருக்கலாம். இதுவல்லாமல் எத்தனையோ பிரமர்கள் நொங்கினார்கள் என்றும், எத்தனையோ தலைகளை, மாலையாகச் சிவபெருமான் அணிந்தனர் என்றும், கேட்கின்றோம். இதுவன்றி பிரமப்பிரளய காலத்தில், பிர்மன் அழிந்துபடுவாரென்றும் படிக்கின்றோம். ஆகையினாலே இவரை முழுமுதற்கடவுளர் என்று கூறுதல் அடாது.

இரண்டாவது கூறிய மலர்மகன் கேள்வனை முழுமுதற் கடவுளென்றாலோ, அவர்க்குறிய திருநாமங்கள் பின்வருவனவாம்:—மாதவன், மாயன் வாமனன், வாசுதேவன், சிதரன், நந்தகோபன் மகன், பஞ்சவர்க்குத்தூதன், சாரங்கபாணி, சங்கமேந்தி, கொண்டல்வண்ணன், காகுத்தன், கோவிந்தன், அச்சுதன், மால், விண்டு, வேலையிற்றுயின்றோன், உந்திபூத்தோன், துழாய்மௌலி, ஆதிவராகன், வைகுண்டநாதன், புண்டரிகனை கேள்வன், தாமோதரன், முராரி, நேமி, வலவன், தேவகிமைந்தன், வனமாலி, புயிடந்தோன், சலசலோசனன், அனந்தசயனன், பீதாம்பரன், உலகளந்தருள்வோன், பஞ்சாயுதன், உலகுண்ட பெம்மாள், அல்லக மூலையோடாவியருந்தினோன், நாரசிங்கன், அரவணைச்செல்வன், கண்ணன், அறிதுயிலமர்ந்தமூர்த்தி, பிர்மனைப்பெற்றதாதை, பின்னை கேள்வன், முகுந்தன், கரியவன், நெடியோன், காவற்கடவுள், நாராயணன் என்ற இப்பேர்களையுடையான்.

இப்பேர்களை ஆராயும்போது இவர் முழுமுதற்கடவுளுக்குத் தகாத சில செய்கைகளைச் செய்ததைக் காண்கிறோம். அன்றியும், முழுமுதற்கடவுளாயுள்ளோன் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தல்

தீகாத தென்றும். "கண்ணபுரமாலே கடவுளினும் நீபதிகம், ஒன்னிலும் நானதிகம் ஒன்றே கேள்; ஆதிபுயர் சிவனுக்கு ஒன்றுமில்லை, உன் பிறப்போ பத்து, 'என் பிறப்போ எண்ணத் தொலையாது" என்று காளமேகர் நிந்தாஸ்துதியாகப் பாடியபடி திருமால் பத்து பிறவி, மச்சராயும், கூர்மராயும், வராகராயும், நாரசிம்மராயும், வாமனராயும், பரசுராமராயும், கோதண்டராமராயும், பலராமராயும், கிருஷ்ண கலிக்கிகளுமாயும் அவதாரமெடுத்ததாக வாசிக்கிறோம்.

முழுமுதற்கடவுளாயினோர்க்கு, உலக சம்மந்தமுடைய மாயையின் வயப்பட்டு சாதாரணமனிதரைப்போல் புலம்புவதும், சந்தோஷப்படுவதும், ஒவ்வாத காரியமாம். இராமாவதாரத்தில் எவ்வளவோ துன்பங்களை ஸ்ரீ ராமபிரான் அடைந்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் உலகானுபவத்தில் மூழ்கிக் கரை ஏறுபவர்களைப்பெருங்கடவுள் என்று சொல்வது தகுதியற்றதென்று நீங்களே ஒப்புக்கொள்ளலாம்.

இனி ருத்திரனைப்பற்றிச்சொல்வோமானால், அவர் பார்த்ததெல்லாம் நீறும், கெட்டும், போயினவேயன்றி ஒன்றும் முழுமையும் இருக்கக்காணவில்லை. ருத்திரசப்தத்துக்கு அழிவு என்று பொருள்.

எது எதினின்றும், உண்டாயிற்றோ, அது, அதனுள் ஒடுங்குவது ஞாயம். அது போலவே இவர் எவற்றையும் ஒடுக்கும் சக்திவாய்ந்தவரேயன்றித் தானே உண்டாக்குவதில்லை. ஆகையினாலே, இவர் முழு முதற் கடவுளென்று சொல்வது எங்ஙனம்?

முழுமுதற் கடவுளாயினர், எல்லாவற்றையும் ஆக்கி, படைத்தும், அழித்தும், மறைத்தும், அருளியும், வேண்டுவார்க்கு வேண்டுவதைக்கொடுக்கும் சக்தி வாய்ந்தவராக அன்றோ, இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சாக்ஷாத்காரத்தையுடைய சச்சிதானந்தப் பிழம்பாயிருப்பவரேயன்றோ, உலகம் முழு முதற் கடவுள் என்று கூறுகின்றது. சொற்குற்றமும், பொருட்குற்றமுமுள்ள கவிகளைக் கேட்குங்கால், அவைகளைப் பாடிய புலவர்களை ஒட்டிய சாதனவருக்கும் வில்லிபுத்தூராரும், இன்னும் பல, பல, யோனியில் எய்த பல நெறிபெறாவே, முன்னம் பலர் அடிதேடவும், முடிதேடவும், எட்டாவண்ணம் பலபயில்வார் புனலணி தில்லையுள் ஆடும் பொன்னம்பல நாதன் பொற்கழலென்றார்.

அவ்வாறு ஆயிரமிளங்கதிர் ஒருங்கு சேரத்தோன்றிய சுடரென நிற்கும் ஐயனே முழுமுதற் கடவுளாவான்.

——— :0: ———

ஸ்ரீ ஜகத்குரு மகாத்மியம்.

[கே. ஜி. முனிசாமி நாயுடு, கிருஷ்ணகிரி.]

ஸ்ரீ கணேசன்றுதி.

யத் ப்ரஸாத லவம் ப்ராப்ய ப்ரத்யூஹ ஜலதிம் ஜநா:
மஹாரப்பாஸ்தாந்த் யேதம் விக்நேசமநிசம் நம:

ஸ்ரீ தேவிவணக்கம்.

யாம்ச்ரியம் நகஜாம் வாசாம் தேவீ மாஹுர் விலக்ஷணும்
தாம் லோகமாதரம் வந்தே வாக்விபூதி ப்ரஸித்தயே

ஸ்ரீ கண்ணன்றுதி.

மந்தஸ்மித முகாம் போஜம் ரமாலங்க்ருத வக்ஷஸம்
வந்தாரு ஜந மந்தாரம் வந்தேஹம் யது நந்தனம்.

சாந்தி.

ஓம் என்று சொல்லும் ப்ரணவ வடிவமான எவ்வஸ்து மறைகளால் போற்றப்படுகின்றதோ, அவ்வேகவஸ்துவை நாமுணர்ந்து அடைவோமாக; அது நம்மை ஆதரிக்க வணங்குவோமாக. ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விஞ்ஞாபனம்.

அரிய அத்வைத சிரோரத்னமாகிய ஸ்ரீ ஜகத்குரு ஆதி சங்கர பகவத் பூஜ்ய பாதாசாரிய சுவாமிகளின் மகாத்மியத்தைச் செவ்வனே யுணர்ந்த வடமொழித் தென்மொழி வல்லார் எக்காலத்தும் அவரைப்புகழ்ந்து கொண்டாடுகின்றார்களெனின், எம்போன்றவர்கள் அத்தகையவரைப் போற்றிவருவது வியப்பன்றும்.

ஸ்ரீ ஆதி சங்கராசாரியரது சரித்திரம் அக்காலத்தில் பற்பல பண்டிதர்களாலும், அரசர்களாலும் ஆங்காங்குணர்ந்த வைபவங்களைத் தழுவிப் பலவாக வடமொழியில் எழுதப்பட்டுள்ளது. அவைகளாவன :—பிருகத் சங்கர விஜயம், கேரளீயம், மற்றொரு கேரளீயம், வியாஸாசலியம், சங்கர விஜய விலாசம்,—சங்கர விஜயம், சங்கராப்யுதயம், பதஞ்சலி விஜயம், இராஜதரங்கணி வென்பவைகளுமாம். சில காவியங்கள், சிலாசாசனங்கள் முதலியவைகளுமுண்டு. அவைகளைத் தழுவி நம் தமிழ்நாட்டில் சங்கரவிஜயமெனவும், ஆதி சங்கராசாரியர் சரித்திர சங்கிரகமெனவும்; தெலுங்கு நாட்டில் சங்கரவிஜயத்வஜமெனவும், பின்னும் ஆங்கிலம் முதலிய பாஷைகளிலும் தக்க பண்டிதர்களால் ஷ்டி சரிதம் வரையப்பட்டிருக்கின்றன. அவைகளை முற்றும் நாம் தேடிப்பார்க்க சற்று மியலாவாம்.

இதுகாறும் நமக்குக் கிட்டியுள்ள முக்கிய சரித்திர வெளியீட்டை ஆதாரமாகக் கொண்டு ஷ்டி சரிதத்தை வேண்டிய விடத்தில் சுருக்கியும், விரித்தும் சிற்சில முக்கியமான விடத்தில் சங்கையற மேற்கோளைக்குறிப்பிட்டும் ஒருவாறு ஆராய்ந்து சொல்ல சில வைதிக அபிமானிகள் எம்மைத் தூண்டியதால் யாம் அவ்வாறு செய்ய முன்வரலாயினம்.

இவ்வாராய்ச்சியில் ஏதாவது குற்றங் குறைகளேற்படின், நல்லாரிலக்கணமுடைய பெரியோர் பொருத்தமான விஷயங்களை வரைந்தனுப்பினால், யாம் அதைச்சேர்த்துத் திருத்திக்கொள்ளக் கூடும்.

ஸ்ரீ ஜகத்குரு சரித்திர ஆராய்ச்சி.

பகவத் பாதாற் துதி.

பங்கயன் முதலோர் போற்றும் பரமனே கருணை பொங்கி
யிங்குளோர் குறைக டீர்ப்பா னெழிற் றிருமேனி கொண்டு
சங்கரப் பெயராற் றோன்றிச் சாற்றினன் வேதாந் தமாதி
துங்கமா மவன் பதத்திற் றூய்மலர் தூவித் தொழுவாம்.

1. ஸ்ரீ கைலைத் தீர்மானம் :—

ஆஸ்திகர்களான வைணவர்கள் முதலாயுள்ள ஹிந்துக்களடங்கிய இந்நிலவுலகின்கண், இற்றைக்கு சுமார் 3000 வருடக்கு முன் வேதசம்மதமான உத்தம நெறி குறைவுபட (அப்போதைய) பௌத்தாதி பாஷண்ட மதங்கள் பரவி வந்தன.

துர்வாதிகளின் அவைதிகமார்க்கங்களைக் கண்டுச் சகியாத தேவர்கள் ஸ்ரீ கைலேயின் கண், சித்த சாரணாதி சிவ கணங்களால் சூழப்பட்டுத் திலகம்போன்று உமாசகிதராய் வீற்றிரா நின்ற ஸ்ரீ சிவபிரான் புன்னகையுடன் தேவர்களுக்கு அபயாஸ்தங் கொடுத்தவராய்த் தக்க விடை பகர்ந்தனுப்பினர். பின்னர் ஸ்ரீ கைலேநாதன், ஸ்ரீ சரவணப்பெருமாளை நோக்கி—ஹேகுமரா! முன்னமே யாமேவியவண்ணம் ஸ்ரீ விஷ்ணுவானவர் சங்க்ருஷ்ண முனியாகவும், ஸ்ரீ ஆதி சேஷன் பதஞ்சலி முனியாகவும் அவதரித்து தேவகாண்டத்தினையும், யோககாண்டத்தினையும் விளக்குகின்றார்கள். நீ உலகில் குமாரிளப்பட்டராக அவதரித்து பூர்வ மீமாம்ஸமென்னும் ஜைமினி நூலையாதரித்து, பிரஹ்மதேவனது அவதாரமாகிய மண்டன மிசிரனைச் சிடனைகக் கொண்டும், சுதன்வன் எனனும் அரசனாயவதரித்த (இந்திரனை)யும் சகாயமாகக் கொண்டு மேற்சொன்ன புத்தர் முதலிய அவைதிகர்களைச் சிக்ஷித்து கர்மகாண்டத்தினை உலகில் பரவச் செய்வாயாக. பின்னர் யாம் சிவ பக்தராய சிவகுருவுக்குப் புத்திரனாக அவதரித்து வேதமுடிவாய ஞான காண்டத்தை உலகெங்கும் நிலை நாட்டுவாமெனப் பரமேசுவரர் ஆஞ்ஞாபித்தனர். (சிவகுருவுக்கு சங்கரர் புத்திரராய்ப் பிறப்பதாக முன் வரமேற்பட்டிருப்பதாக ஒரு ஆராய்ச்சிக்காரர் சொல்லுகிறார்.) தேவர்கள் களிப்படைந்தார்கள்.

2. தேவர்கள் அவதாரம் :—

ஸ்ரீ கைலேவாசனாகிய சிவபிரான் கட்டளையிட்ட வண்ணம் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் குமாரிளபட்டரென்னும் பட்டபாஸ்கராராக இப்பூவுலகில் நாஸ்திகர் வேரற அவதரித்தார். (இவர் திருவேணியென்னும் பிரயாகை க்ஷேத்திரத்தி (அலஹாபாதி)ல் அவதரித்ததாக ஒருவர் ஆராய்ந்து சொல்லுகிறார்.) ஸ்ரீ பட்டர் ஜைமினி பகவானியற்றிய கர்மகாண்ட சூத்திரத்திற்கு விரிவாய் பாஷியமியற்றி அதையுலகெங்கும் பரவச்செய்தார். (நான்மறைகள் கர்மம், பக்தி, ஞானம் என்று திரி ஷட்க்ங்களாக பிரிகப்படுவதால், நாஸ்திகர்கள் நெருங்கிய காலத்தில் பிரதமமாக கர்மத்தைப் புகட்ட நேர்ந்தது.) அவதார மூர்த்தங்களான சங்கர்ஷணரும், பதஞ்சலியும் வேதத்தின் மத்தியகாண்டமான பக்தி காண்டத்தை விளக்கியதுடன் யோக சூத்திரத்தையும் இயற்றியருளினார்கள். பிரமதேவர் மாஹிஷ்மதி என்னுமிடத்தில்

மண்டன மிசிரராகவும், சரஸ்வதி (மனைவி) பாரதியாகவும் அவதரித்து கர்மஸ்தாபனார்த்தமாய் விளங்கினார்கள். ஏனைய கணங்களும் ஆங்காங்கு சத் சகாயார்த்தமாய் புண்ணிய உலகில் தோன்றினார்கள். அவ்வமயம் இப்பூவுலகானது ஏக சக்ராதிபத்தியம்பெற்ற மகாராஜா தேசத்தின் க்ஷேமலாபவிசாரணார்த்தமாய் அந்தப்புரத்தினின்று சிம்மாதனத்தில் வீற்றிருக்கப்போவதாகச் சங்கதிகேட்ட தேசாதிபதியின் அங்கங்களான மந்திரி முதல் கட்டியனீறாக உள்ள யாவரும் உள்ளத்தில் குதூகுலமும், மதிப்பும் ஏற்பட்டுத் தமக்குரிய வேலைகளை தீவரமாய்த் தாங்கி ஆரவார மங்கள கோஷங்களுக்கிடையில் மகாராஜாவை எதிர்நோக்கிக்கொண்டிருந்த வண்ணம்; ஸ்ரீ (ஞானாதிபதி) ஜகத் குருவின் அங்கங்களான ஸ்ரீ பட்டபாதர் முதலாக யாவரும் ஆஸ்திக பிரசாரத்தில் ஈடுபட்டு ஞான மூர்த்தியை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள். (தொடரும்.)

—:0:—

பிறப்பு இறப்பு.

[A. K. முருகைய்ய முதலியார், தமிழ்பண்டிதர், முனிசிபல் ஹைஸ்கூல், திருபத்தூர்.]

உலகின்கண், பை, முட்டை, நிலம், வியர்வை, ஆகிய இவைகளில் உண்டாகும் நால்வகையோனி, மக்கள், தேவர், நரகர், விலங்கு, புள், நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைத்தோற்றம், எண்பத்துநான்கு லக்ஷம் யோனி பேதங்களாக உடலோடும் உயிர்கள் தோற்றும் தோற்றத்தையே பிறப்பென்றும், அவ்வாறு தோற்றிய ஜீவகோடிகளது உடலைவிட்டு உயிர் நீங்குவதையே இறப்பென்றும் கூறுவது, யாவரும் அறிந்ததொன்றாயினும், இவ்விரண்டின் தன்மைகளை உலகவழக்கத்தையும் நூல் வழக்கத்தையும் ஒட்டி ஆராய்வது யாவருக்கும் இன்றியமையாததாகலின், நம்சிற்றறிவிற்கெட்டியமட்டும் அவ்வாராய்ச்சியிற் புகுவோம்.

நிர்விகாரமாயிருக்கிற சுத்த சிவத் (பிரமத்) தில் அக்னியிற் சூடுபோல் பிரிக்கப்படாத இயற்கையாயுள்ள சத்தியினின்றும் மும்மூர்த்திகளும் தோன்றினரென்றும், அம்மூவரால் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் நிகழுகின்றனவென்பதும், நூற்றுணிபு.

அம்மூவரும் பரமேஸ்வர நியமனத்தை மேற்கொண்டு தம் தம் தொழில்களைப் பிரதிநிதிகளாகவிருந்து நடாத்துவதாலும், அத்தொழில்களை நடாத்துங்கால் அவற்றிற்பற்றின்றி உயிர்களது சங்கற்பத்தாலுண்டாகிய நல்வினை தீவினைகளின் பயனாக அவ் வினைகளுக்குத் தக்க போகங்களை நுகர்விப்பதாலும், தங்களுக் கென்று ஓர் செயல் இன்மையாலும், பிறப்பிறப்பையும் இன்ப துன்பங்களையும் உடையவராகார். இராமகிருஷ்ணாதி அவதாரங் களும் மேற்கூறிய பகுதியுள் அடங்கும்.

அவர்கள் ஒழிந்த உயர்திணைப் பொருள்களாகிய மக்கள் தேவர், நரகர், ஆதியரும், அஃறிணைப்பொருள்களாகிய விலங்கு, புள், ஊர்வன முதலிய சரப்பொருள்களும், மலை, மரம், செடி, கொடி முதலிய அசரப்பொருள்களும், மெய்யுணர்ச்சியின்றி யான் எனதென்னும் அபிமானத்தை மேற்கொண்டு அளவற்ற சங்கற்பவிகற்பங்களால் நல்வினை தீவினைகளைச் சம்பாதித்து அவ் வினைகளின் பயனாக பல வேறுபிறப்படைந்து இன்ப துன்பங்களை நுகர்வதால், அதையேபிறப்பென்றும், அவ்வாறு ஒவ்வொரு பிறவிதோறும் ஒவ்வோருயிரும் எடுக்கின்ற உடம்பின் அழி வையே இறப்பென்றும் சொல்லலாம்.

எவ்வுயிரும் இன்பத்தையே விரும்பலால் இப்பிறப்பிறப்புக் களின் தன்மைகளை விசாரிக்குமிடத்து, பிறப்பில் இன்பமுள்ள தா அன்றி துன்பமுள்ளதா? இறப்பில் துன்பமுள்ளதா அன்றி இன்பமுள்ளதா? என்னும் கேள்வியுண்டாகிறது.

பிறப்பில் இன்பமுளதாயில் "புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்—பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்—கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்—வல்லசுரராகி முனிவ ராய்த் தேவராய்—செல்லாநின்ற தித்தாவரசங்கமத்துள்—எல் லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்றும் "பிற வாதிருக்க வரந்தரல்வேண்டும்" என்றும், இறைவனை வேண் டிக்கொள்வானேன்? "பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந்து உளுத்து அசும்பு ஒழுகிய பொய்க்கூரை" என்றதற்கேற்ப, இரத்தமாமிச முதலாகிய சத்ததாதுக்களாலமைந்த உடம்பில் நவத்துவாரங்களிலும் மலங்கள் சிந்துவதாலும், புழுக்கூடா யிருப்பதாலும், அவ்வுடம்பைப்சேர்ந்த சுகந்தப்பொருள்களும் சிறிது நேரத்தில் துர்க்கந்தம் வீசுவதாலும், கூர்ந்து நோக்கு வார்க்கு அதனால் இன்பம் உண்டென்று சொல்ல எவ்வாறு

நாவெழும்? மற்றும், தாய் வயிற்றில் தங்கியிருக்கும்போது ஐவகைத்துன்பங்களும், குழந்தைப்பருவத்தில் அறியாமையென்னுந்துன்பமும், குமாரபருவத்தில் காமத்தால் அழகிய மனைவியென்றும் மக்கள் என்றுங் கூடியிருக்குங்காலத்து உண்டாகும் துன்பமும், நோயாலும், வறுமையாலும், பசியாலும், வருந்துன்பமும், நரைதிரை மூப்புக்களால் உண்டாகும் துன்பமும் எனத் துன்பங்களுக்கே வாசஸ்தானமாயிருக்கின்ற பிறப்பினுல் துன்பமேயன்றி எள்ளளவேனும் இன்பம் இல்லையென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோலத்தெரிகிறது.

இவ்வாறிருக்க அவ்வுடம்பால் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் இன்பங்கள் எல்லாம் மயக்கத்தால் துன்பத்தையே இன்பமாகக்கொள்ளும் போலியின்பமேதவிர உண்மையின்பமல்ல. என்றாலும் "சுக்கிலத்துளியுளே சுரோணிதக் கருவுளே—முச்சதுரவாசலின் முளைத்தெழுந்த மோட்டினுன்—மெய்ச்சதுரமெய்யுளே விளங்கு ஞானதீயம்" என்றும் "உருக்கி நெஞ்சையுட்கலந்த உண்மை" என்றும், உடம்பையும் உள்ளத்தையும் கோயிலாக்க் கூறியிருப்பதாலும், "கண்ணுண்டு காணக்கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்—பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையால்—எண்ணுண்டு சாத்த" என்றபடி காணக்கண்ணையும், கேட்கக்காதையும், துதிக்க நாவையும், நினைக்க மனதையும்பரமேஸ்வரன் தந்திருத்தலாலும், அப்பெருங்கருணையை நினைக்கும்போது "அரிது அரிது மானிடராதல் அரிது" என்னும் ஔவைப்பிராட்டியாரின் அமுதமொழி ஞாபகத்திற்கு வாராமல் போகாது. ஆகவே இம்மை மறுமையின்பங்களை அடைவதற்கு ஏனைய பிறப்பைக் காட்டிலும் மனிதப்பிறப்பே சிறந்ததெனச் சித்தாந்தப்படுத்தலாம்.

இனி இறப்பு நேருங்காலத்தில் பஞ்சேந்திரியங்களும் தாம் தாம் தங்குமிடமாகிய பொறிகளினின்றும் தடுமாற்றமடைந்து, வாத பித்த சிலேஷ்மங்கள் ஒன்றோடொன்று பிணங்கி, நல்லறிவிழந்து, இறுதியில் சிலேஷ்மம் மேலிட்டு நடுக்கடலில் சுழல் காற்றினுல் அலைப்புண்ட மரக்கலம்போலச் சுழன்று, அக்கப்பல் கடலில் முழுகுவதுபோல் ஆற்றொணுத் துன்பமுற்ற உடலை விட்டு உயிர் நீங்கும். உயிர் பிரியுங்காலம் க்ஷணப்பொழுதாயினும் இந்நிலைமை அடைந்தேதீரும். என்பதை "புலனைந்தும்

பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐமேலுந்தி—அலமந்தப்போதாக, என்பதாலும், "யானேதும்பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கென் கடவேன்" என்பதாலும், "இந்திரிய வயமாக்கி இறப்பதற்கே காரணமாய்—அந்தாமே திரிந்து போய் அருநரகில் வீழ்வோர்க்கு" என்பதாலும், அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப்பள்ளியானே" என்பதாலும், இறப்பினால் உண்டாகும் துன்பத்தை பரமேஸ்வரன் ஒருவன் அறிவானேயன்றி ஏனையோர் அறியார் என்பதாலும், அவ்விறப்பினால் துன்பந்தானோ இன்பமும் உண்டோ என்னும் வினாவுக்கு விடையின்றாம். இன்றாக இறப்பினால் துன்பமென்பதே துணியப்படும்.

என்னே? சூரபத்மன், இரணியன், இராவணன் முதலிய கொடியவர்கள் இறப்பினாலன்றோ மூன்றுலகங்களும் இன்பமடைந்தன? இதனால் இறந்த காலங்களில் உண்டாயிருந்த துன்பங்கள் நிகழ்காலங்களிலும் எதிர்காலங்களிலும் இன்பமாய் காணப்பட்டதன்றோ? அறியாமையையுடைய ஒருவனும், மறப்பையுடைய ஒருவனும், அறியாமையின் இறப்பினால் அறிவையும், மறப்பின் இறப்பினால் நினைப்பையும் பெற்று இன்பம் அடைகின்றனன் என்பது பிரசித்தமன்றோ? உலகத்தில் தோன்றும் பொருள்களுக்குள்ள பருவங்களின் இறப்பினால் நாளுக்கு நாள் உயர்தல் என்னும் இன்பம் உண்டாகின்றதன்றோ? பொதுவாக அரும்பென்னும் பருவமிறந்து மலராய், மலரென்னும் பருவமிறந்து பிஞ்சாய், பிஞ்சென்னும் பருவமிறந்து காயாய், காயென்னும் பருவமிறந்து கனியாய் இன்பத்தைக்கொடுக்கின்றது.

அவ்வாறே பெருங்கருணை வள்ளலாகிய பரமேஸ்வரனும் அநாதிகாலந் தொடங்கி அறியாமையென்னும் செயற்கைச் சேற்றிற் புரண்டு உருமாறி உழலும் உயிர்களை இன்பமென்னும் இயற்கைத் தன்மையைத்தந்து ஆட்கொள்ளும்பொருட்டும், மக்களின் நன்மையைவேண்டித் தண்டித்து நல்வழிப்படுத்தும் தந்தையைப்போல, ஓர்பிறப்பில் வினைவசத்தால் அநுபவிக்க வேண்டிய கர்மங்களின் பலன்களை அநுபவித்து இளைத்த உயிர்களின் இளைப்பைத்தீர்க்கும் பொருட்டும், மரணமென்னும் தூக்கத்தைத் தந்து அவ்விளைப்பைமாற்றி புத்துடம்பைத்தருகிறார். தந்தை கொடுக்கும் தண்டனையைத் துன்பமென்று கருதும் சிறுவரியல்பைப்போல பரமேஸ்வரன் தரும் மரணதண்டனையை உயிர்கள் இன்பமென்று கருதா.

இக்கருத்தை 'உள்ளமைத்தன்றே தெய்வப்புலவரும் "உறங்குவதுபோலுஞ்சாக்காடு உறங்கி—விழிப்பது போலும் பிறப்பு" என்றார்.

எனின் முன் சொல்லியவாறு 'யானேதும்பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கென்கடவேன்' என்ற திருவாக்கால் இறப்பென்பது துன்பமயமாகத்தானே வருகின்றதென்றாலோ அத்திருவாக்கின் கருத்து அற்றன்று 'இறந்தன பிறக்கும்' என்ற முறைமைப்படி மீட்டும் பிறவியைத்தந்து துன்பசாகரத்தில் அழுத்தாவண்ணம் இறைவனை வேண்டிக்கொண்ட வேண்டுகோளேயாம்.

இவ்வாறு ஊன்றிப்பாராதார்க்கு 'தண்ணீரில் மரநிழல் தலைகீழாய்த்தோற்றுவதுபோல்' அதன் உண்மைப் பொருள் நன்கு விளங்காது இதுபற்றியே திருமூலநாயனாரும் 'அண்ணாந்து பார்க்க அழிவற்றவாறே' என்றார். கரும்பை ஆலையிலிட்டு ஆட்டி சாறு பிழிந்து காய்ச்சி முன்னமே வெல்லக்கட்டியாக்கிக்கொண்டவர் பிறகு சாறு பிழிந்த கோது நெருப்பில் பற்றி யெரியுங்கால் அதுபற்றி கவலைப்படார். அதுபோல் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் மக்கள் அடையும் பேறு நான்கினையும் ஈசனருளால் இம்மையிலேயே எய்தப் பெற்றவர் இறப்பிற் கொருகாலும் அஞ்சார் என்னும் பொருள் அமைந்த

'கரும்பாட்டிக்கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயராண் டுழவார்
வருந்தி உடம்பின் பயன் கொண்டார் கூற்றம்
வருங்கால் பரிவதிலர்.'

என்று கூறும் நாலடியார் கூற்றால் அன்னோர்க்கு இன்பமேயன்றி துன்பமென்னும் பேரும் இன்றாம்.

ஆகவே பிறப்பையும் இறப்பையும் தம்முடைமையாகிய உயிர்களுக்கு உடையானாகிய பரமேஸ்வரன் இன்பத்தையருளும் பொருட்டே தருகின்றான் என்பதும்,

'பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல்,
உன்னையென்றும் மறவாமை வேண்டும்' எனக்காரைக்காலம்மையார் வேண்டிக்கொண்டவாறு உண்மையுணர்ச்சியால் தஞ்செயல் என்பதை அறவே ஒழித்து சிவன் செயலாலே யாவும் வரும் எனத்தெளிந்து அருள்வழி நின்ற மெய்யடியார்க்கு இறப்பும் இன்பமே, பிறப்பும் இன்பமேயென்பதும் நிச்சயம் எனத் தீர்மானிக்கலாம்.

சுபம்!

கிராம வாழ்க்கை.

[ராமசுப்பிரமணிய நாவலர், பத்மநாபபுரம்.]
(138-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

மனத்தை மலினமுறச் செய்யாது வாழ்தலே நல்வாழ்வாம். அவ்வாறு வாழ்தற்குக் கிராமவாசம் மிகவும் உதவிசெய்புமென்பதில் ஐயமின்று. கிராமங்களில் வதிவோர்க்கு உண்மையான களிப்புண்டாதல் எளிது. தமது பக்தியை வெளிப்படுத்தற் பொருட்டுக் கிராமவாசிகள் குறிப்பிட்ட ஓர் தேவதையை வணங்குவதுண்டு. அத்தேவதைக்குக் 'கிராமதேவதை' என்று பெயர். தற்காலத்தும் பற்பல விடங்களில் கிராமதேவதையை அன்போடு உபாசித்தலைக் காணலாம். இதனானே கிராமவாசிகள் அன்பும், தெய்வ நம்பிக்கையும், ஒற்றுமையும் உடையோர் என்பது புலனாகும். அவர்களது ஒற்றுமைக்குணத்தால் பல அரிய விஷயங்கள் நடந்தேறிவருகின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் பஜனைமடம், அம்மன் கோயில் முதலியன கட்டுவிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், அவர்களிடத்து ஒரு கொடிய வழக்கம் மட்டும் தலை காட்டிவிட்டது. துஷ்ட தேவதைகட்குப் பலியிடுதல் அவர்கட்கிடையில் நிகழ்ந்து வருவது மிகவும் விசனிக்கத்தக்கதொன்றாம். இவ்வொழுக்கம் துர்ப்போதனையாலும் அவர்களது திட விசுவாசத்தாலுமே வந்ததென்று தோன்றுகின்றது. சூந்திரங்கற்ற சில மந்திரவாதிகளுடைய போதனையாலும் சங்கையினாலும், பயத்தினாலும் இவ்வழக்கம் அவர்களிடத்து ஏற்பட்டிருக்கவேண்டும். தம்மைச்சார்ந்தவர் யார்க்கேனும் நோய்கண்டால் அஃதொழியும் பொருட்டு அவர்கள் கிராம தேவதைக்கு வழிபாடுசெய்ய நிச்சயிப்பதுண்டு. அத்துடன் துர்ப்போதனையால் அத்தேவதைக்குப் பலியிடலும் வழக்கமாய் விட்டது. இது கிராமவாசத்தாலுண்டாய பலனன்று. ஆனால் இவர்களது கல்வியறிவின்மையே அவர்களை இக்கதிக்குக் கொண்டுவந்துவிட்டதுபோலும். இன்னும் மேற்கூறியது போன்ற சில ஒழுக்கங்களும் கல்விக் குறைவினாலேயே அவர்கட்கிடையிற் பரவியிருக்கின்றன.

கல்வியைக் கிராமவாசிகட்கு உற்ற நண்பனுக்கர்தவரை யில் அவர்களது தீய ஒழுக்கங்கள் அவர்களை விட்டு விலகா. தம் கழனிகளைப்பற்றியும், குடும்ப காரியங்களைப்பற்றியும் அவர்கள் முக்கியமாய்க் கவனமெடுத்துக்கொள்ளவேண்டும். அவற்றைப்பற்றிய அலுவல் ஒழிந்து இரவில் தூங்குவதற்குமுன் சின்னேரம் நன்னூல்களைப் பாராயணஞ்செய்தற்கு அவர்கள் முற்படின் மிகுந்த நன்மையுண்டாகும். அன்றியும், கிருஷியில்லாத ஆறுமாதங்களிலும் அவர்கள் கற்றுக்கொள்ளலாகும். சிலர் இவ்வாறு மாதங்களிலும் சுகமாய்த் தூங்குகின்றார்கள்; சிலர் சூதாடுகின்றனர்; சிலர் வீணாகப் பிறர்மேல் பழி செலுத்துகின்றனர். இவ்வாறே சமயம் பயனின்றிச் செலவு செய்யப்படுகின்றது. கிராமவாசிகள் உன்னத பதவியை அடைய வேண்டுமாயின், கல்வியை அவர்கள் ஒருபோதும் புறக்கணிக்கலாகாது. அக்கல்வியும் உண்மையான நாகரீகத்தைப் போதிப்பதாயிருக்க வேண்டும். போலி நாகரீகத்தை உண்டுபண்ணுங் கல்வி உண்மைக்கல்வியன்று. அப்பேர்க்கொத்த கல்வியைக் கற்பதைவிட கல்லாதிருத்தல் மிகுந்த நன்மை பயக்கும். கல்வியால் உண்மை நாகரீகம் உண்டாயின் கிராமவாசிகள் மேலோங்குவது திண்ணமேயாம். அன்றியும் நாகரீகமுடையது நகரமாதலின் உண்மை நாகரீகமற்ற கிராமமே நகரமாம். போலி நாகரீகமுற்ற நகரம் நரகமாம். எப்பொழுதும் இயற்கை நலத்தை யனுபவித்தானந்தமுறுதற்குக் கிராமமே நல்லிடமாதலின், அதுவே சுவர்க்கமாம்.

கிராமத்தின்கண் வதியும் ஆடவர்களும், பெண்களும் நல்லொழுக்கமுடையோர்கள் என்பதில் ஐயமில்லை. ஆடவர்களினும் பெண்டிர் தம் கடமையைச் சரிவரச்செய்து வருதல் எல்லோருமறிந்ததே. தம் கற்பு நிலைவழாமல் பாதுகாத்துக் கணவரைக் கண்போற் போற்றும் பெண்டிர் பலரை கிராமத்திற் காணலாம். ஆனால், இடையிடையே துர்க்குணமுடைய பெண்டிரும் உளர். சோற்றிலும் கற்கள் கிடக்குமல்லவா ? கிராமங்களை அடுத்துப் போலி நகரங்களும் இருத்தலின் அக்கிராமங்களும் மலினமுறுகின்றன. நகரங்களில் உள்ள பெண்டிருட் பலரும் கற்புநிலை தவறியவமே போதல் கண்கூடு.

முற்காலத்து, கிராமங்களில் பாடசாலையும் நல்லாசிரியரும் இருந்து வந்தனர். அதனால் கிராமத்தின்கண் வதிந்த பாலர்கட்குப் பெரியதோர் பயனுண்டாயிற்று. தற்போதைய கல்வி

போலன்றி உண்மையை விளக்கும் நற்கல்வியையே அக்காலத்திய ஆசிரியர்கள் கற்பித்து வந்தனர். பிள்ளைகட்கும் ஆசிரியரிடத்து உண்மையான அன்பும், வணக்கமும், விசுவாசமும் உண்டாயிருந்தன. ஆசிரியர்கள் சீடர்களைப் புதல்வர்களைப் போலுங் கருதிவந்தனர். ஆனால், நாளாவட்டத்தில் கிராமங்களில் அப்பேர்க்கொந்த ஆசிரியர்களும் அவர்க்குகந்த பாடசாலைகளும் இல்லாமற் போம்படி நேரிட்டதை யாரே அறியார்? இனியுங்கூட தகுந்த முயற்சி செய்யின் தற்போதைய கிராமங்களும் மேன்மையை யடையும் என்பது உண்மையாகும்.

இந்தியாவின் செல்வ நிலைக்கே கிராமங்கள்தான் காரணமாயிருந்தன. விவசாயமும் கைத்தொழிலும் கிராமங்களில் விளங்கின. தற்போது விவசாயம் மட்டும் அரை குறையாய்ச் செய்யப்படுகின்றதே யன்றிக் கைத்தொழிலைக் காண்டலே அரிதாயிருக்கின்றது. முன்னர், கிராமவாசிகள் தம்முள் உண்டாய சச்சரவுகளைக் கிராமாதிகாரி மூலமும் பஞ்சாயத்தார் மூலமும் தீர்த்துவந்தனர். இக்காலத்து ஒற்றுமை குறையவே கிராமாதிகாரிகளையும் பஞ்சாயத்தாரையும் யாரும் பொருட்படுத்தாராயினர். கிராமங்களின் நலமே நாட்டின் நன்மையாகும். எனவே, இந்தியா நன்னிலைமையை அடைய வேண்டுமானல், கிராமங்கள் சீர்திருத்தமடையவேண்டும். இந்தியாவின் உயிர் நிலையே கிராமங்களிடந்தான் இருக்கிறது. ஆதலால் கிராமவாழ்க்கையை ஒருவரும் அலட்சியம் செய்யாதிருப்பதே முறையாகும். கிராமங்களை அழிப்பதென்றால் நாட்டினையே அழிப்பதாகும். கிராமவாழ்க்கை இந்தியாவில் இடையூறின்றி நிலவுமாறு செய்தால் நாட்டிற்குரிய நன்மைகள் பலவும் எளிதிலுண்டாம். மனிதனுடைய அறிவைத் தூய்மைப்படுத்துவதற்குக் கிராமவாழ்க்கையொன்றே போதுமானது.

—:0:—

மணம்—III.

[காஞ்சி—வாசுதேவ ஐயர், தமிழ்ப்பண்டிதர்,
போர்டு ஹைஸ்கூல், கிருஷ்ணகிரி.]

(181-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

அஷ்டாவக்ரர் என்னும் *முனிவர் ஒருவர் இருந்தார். அத்தவ முனிவர் ஒருநாள் வாதான்யர் என்னும் இருடியர்பால் சென்று, அன்னாருடைய அருந்தவப்புதல்வியை மணஞ்செய்து தரல் வேண்டுமெனக்கேட்டார். அப்பெண்ணின் பெயர் ஸுப்ரபை. பெயர்க்கேற்ற வனப்பினையுடையாள். கல்வி கேள்விகளிற் சிறந்தவள். அத்தகையாளை எவ்வாற்றானும் தமது வாழ்க்கைத்துணைவியாய்ப் பெறவிரும்பினார். பிறகு அப்பெண்ணின் தந்தையாகிய வாதான்யர் அஷ்டாவக்ரரை நோக்கி 'ஓ! புருஷசிரேஷ்டரே! யான் என் புதல்வியைப் பாணிக்கிரணஞ்செய்து தருதற்கு யாதொரு தடையுமின்று; அதற்கு முன் யான் கூறியவாறு நடத்தல் வேண்டும். முதலில் வடதிசைக்குச்சென்று வருவீராயின், ஆண்டு பல அற்புதங்களையும் ஸ்ரீதேவியைப்போன்ற பெண்தவசியினையும் காண்பீர்! ஆங்குச் சென்று திரும்பி வந்தவுடன் என் குமாரத்தியை மணம் புரிந்து கொள்க" என்றார்.

அவ்வுரையைச் சிரமேற்கொண்டு அஷ்டாவக்ரர் வடக்கு நோக்கிச்சென்றார். இடையில் குபேரன் மாளிகையைக்கண்டு ஆங்குச்செல்ல அணுகினார். உடனே வைச்ரணவர் என்னும் பெரியார் எதிர்கொண்டு அழைத்துச்சென்று முகமன் கூறினார். முனிவர் வரவைக்கண்ட தனபதி,

> "முறுவல் இனிதுரை கால்நீர் மணைபாய்
> கிடக்கையோ டிவ்வைந்தும் என்ப தலைச்சென்றார்க்கு
> ஊணொடு செய்யும் சிறப்பு

என்பதற்கிணங்க, அவருக்கு உணவுடனே செய்யும்பல சிறப்புக்கள் செய்து ஆசனத்திலமரச்செய்தார். பின்னர் குபேரன் முனிவரைப்பார்த்து" ஓ! புண்யாத்மாவே! இன்றுதான்

---

* என்று முனிவரெனின், முறையே பல கலைகளைப்பயின்று பரோட்ச ஞானத்தை நாடிச்செல்லும் பிரமசரிய ஒழுக்கம் வாய்ந்தவரென்க.

யான் செய்த தவம் புனிதமாயிற்று. தங்களுடைய மனவிருப்பத்தை யுணர்ந்து பல தேவ மாதர்கள் நடனஞ்செய்யக்காத்துள்ளார்கள். அதிதியாய் வந்தவருக்கு அடியேன் செய்ய வேண்டிய கடமை யல்லவா?'' என்றுரைத்தார். கேட்டதும் முனிவர் "உமது விருப்பத்தின் படியே நடத்துக" என்றார். ஊர்வசி, திலோத்தமை, ரம்பை, முதலிய பல தேவமாதர்கள் கண்கவர் வனப்பினைச் செய்துகொண்டு காந்தர்வமென்னும் கானத்தைப் பாடத்தொடங்கினார்கள். பாட்டிற்கேற்றபடி பலர் நடனஞ்செய்தார்கள். அத்தருணம் அருகாமையில் நின்று கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டிருந்த ரதியென்னும் மங்கைப் பருவமுடையாள் பிறர் வியக்குமாறு பந்தாடத்தொடங்கினாள். ஆடுகையில்,

"சுழன்றன தாமம்; குழன்றது கூந்தல்;
அழன்றது மேனி; அவிழ்ந்தது மேகலை;
எழுந்தது குறுவியர்; இழிந்தது சாந்தம்;
ஓடின தடங்கண்; கூடின புருவம்;
அங்கையி னேற்றும் புறங்கையி னோட்டியும்
தங்குற வளைத்துத் தான்புரிந் தடித்தும்
இடையிடை யிருகால் தெரிதர மடித்தும்
நித்திலக் குறுவியர் பத்தியில் துடைத்தும்
பற்றிய கந்துகஞ் சுற்றுமுறை யுரைத்தும்
தொடையுங் கண்ணியு முறைமுறை யியற்றியும்
அடிமுதன் முடிவரை இழைபல திருத்தியும்
படிந்தவண்(டு) டெழுப்பியும் கிடந்தபந் தெண்ணியும்
தேமவர்த் தொடையல் நிறத்திறம் பிணைத்துப்
பந்துவரல் நோக்கியும் பாணிவர நொடித்துஞ்
சிம்புளித் தடித்துங் கம்பிதம் பாடியும்
ஆழியென வுருட்டியுந் தோழியொடு பேசியும்
சாரிபல வோட்டியும் வாழியென வாழ்த்தியும்

* * * * * *

பெருந்தொடி மாதர் பற்பல வகையால்
எண்ணாயி ரங்கை யேற்றின னேற்றலும்"

பலர் மனம் மாறுதலடைந்தனர். மாமுனிவரோ அவ்வாட்டத்தைப்பார்த்து மகிழ்ந்தவராய் புளியம் பழத்தின் ஓடுபோல்

(ஆண்டு)வதிந்தார். சில காலஞ்சென்றபின், குபேரன்பால் விடைபெற்றுக்கொண்டு (ஹிமோத்கிரி) பனிவரையை நோக்கிச் செல்கையில், தழைத்துப் பூத்துக் காய்த்துள்ள இன்பமான வனத்தின் நடுவில் முனிவர் ஆசிரமங்கள் பலவற்றைக் கண்டார். அதன் சமீபத்தில் அறிவு நிரம்பாத கல்வியாளர் செருக்கைப் போல் செழுங்குன்றொன்று தென்பட்டது. அக்குன்றின்மீது மாளிகையொன்று கட்டப்பட்டிருந்தது. அடிவாரத்தில் பலவித மலர்களோடு தடாகங்கள் சூழ்ந்திருத்தலைக் கண்ணுற்று ஆனந்தங்கொண்டார்.

பின்னர் அம்மாளிகை வாயிலையடைந்து "அதிதியொருவர் ஈண்டு உறைதற்கு வந்துள்ளார். இடமளித்தல்வேண்டும்" என்று கைத்தட்டிச் சப்தஞ்செய்தார். அவ்வொலியைச் செவியுற்ற மாளிகையிலிருந்த ஏழு கன்னியர்கள் வெளிப்போந்து முனிவரை வணங்கிவரவேற்றனர். அவர்கள் யாவரும் மனத்தைக் கொள்ளை கொள்ளும் கட்டழகு வாய்ந்தவர்கள். அவர்களுடைய கடைக்கண் பார்வை காமமாகிய பயிரை வளர்த்தற்கு நீர் போல்வதால், முனிவருடைய ஆசையை அதிகரிக்கச்செய்தது. உடனே அவர் பிரமசரிய விரதத்தில் கைவந்தவராகையால் ஆசையைப் பொறிகளின் வழியே செல்லாதவாறு அடக்குவாராயினர். அதன் பின்னர் அப்பெண்மணிகள் "உத்தமராகிய நீவிர் உள்ளே எழுந்தருளல் வேண்டும்" என்றார்கள். "அவ்வாறே வருகிறேன்" என்று உள்ளே சென்றதும் வணங்கி வழிபாடுசெய்தனர். முனிவர் "யாவர்க்கும் மங்களமுண்டாகக் கடவது" என ஆசிமொழி அளித்தார்.

இவ்வாறிருக்க அம்மாளிகையின் அறையிலிருந்து வயது முதிர்ந்த ஒரு நரை மூதாட்டி பல் அணிகலன்கள் பூண்டு வெள்ளுடைத்தரித்தவளாய் முனிவரை நெருங்கிவந்து வணங்கினள். பின் அவர் அக்கன்னிகைகளைப்பார்த்து "நீங்கள் செய்த உபகாரத்தை யான் மதித்தேன்; இனிமேல் அவரவர்களுக்குரிய இடத்தில் செல்வீர்களாக. மனச் சஞ்சலமற்ற ஒருத்திமட்டும் அடியேனுக்குப் பணிவிடை புரிந்துகொண்டிருக்கட்டும்" என்றார். அவ்வாறே அம்முதியவளைத்தவிர ஏனைய கன்னிகைகள் யாவரும் விடைபெற்றுச் சென்றனர். அச்சமயம் கதிரவனும் மறைந்தான் இரவுந் தலைகாட்டிற்று. அஷ்டாவக்ர முனிவர் அழகுற அமைக்கப்பட்டிருந்த படுக்கைக்குச்சென்றார். செல்வதற்குமுன் "ஓ! அம்மணி! இராப்போது முதிர்ந்துவருகிறது,

தளர்ச்சியடைந்த பருவத்தினளாயுள்ளாய்! நமது காரியமனை த்து முடித்துவிட்டுச் சென்று துயிலுதி" என்று கட்டளையிட் டுப்போயினர். துயிலச்சென்ற அம்மாது நள்ளிரவில் குளிரால் நடுங்குவதாக அபிநயித்து முனிவர் படுக்கையை அணுகினள். உத்தமகுணம் வாய்ந்தவரும் அவளை மரியாதையுடன் வரவேற் றார்; உடனே அக்கிழவி அவரை அன்புடன் இருகையால் தழுவினள்; அப்போது, "நடந்தாலு மிருந்தாலு நவின்றாலுந் துயில்கொண்டு கிடந்தாலும் விழித்தாலுங் கிளர் முடி மன்னர் முதலோர் தொடர்ந்தாலுந் தொழுதாலுந் துதித்தாலு மவமதித் துக் கடந்தாலு மெய்ஞ்ஞானி கமலவிலைப் புனல்போல்வான்" ஐந்தவித்த மெய்ஞ்ஞானியாய் விளங்கினர். அத்தோற்ற த்தைக் கண்ணுற்று அவள் தேனினுமினிய மொழியாள் "அற முணர்ந்த அறிஞரே! என்னை நீர் இவ்வடிவுடன் அச்சுறுத்தல் அழகோ; நான் விரும்பிச்செய்யுங் காரியத்தைத் தடுத்தல் முறையோ; விவாகமின்றி யொருவர்கட்டுக்கு மடங்காமல் தனித் துறையும் கற்புவாய்ந்த கன்னிகைத் தாமே வலிய வந்து அணை வாளாயின், அன்னவள் காதலைத் தணிவிப்பதன்றோ அறநூலு ணர்க்தோர்கடமை" என்றாள். இச்சொல்லைச் செவியுற்ற அஷ்டா வக்ரர் "அம்மணி! மனம்போனபடி செல்வோர்பால் அனேக குற்றங்கள் உண்டாகின்றன. கூடாவொழுக்கமும் பாபத்தை வளர்க்கும். அச்சமின்றி என்னை நீ சுதந்தரமாய்த் தழுவுவ தென்னை? தனக்குத்தானே சுதந்தரமென்று எண்ணி இறு மாந்து முறைதவறி இவ்வாறு நடக்கும் ஸ்திரீ மூவுலகிலுங் கிடையாது. நான்முறை கோடாது அக்கிசாட்சியாய் மணம் புரிந்து இன்பந்துய்ப்பது அறத்தின்பாற் பட்ட தென்பர் அறி ஞர். அம் முறையினின்றும் பிறழ்ந்து என்னை மயக்கத்துணி வது முறையோ? யான் வதான்யர் சொற்படி அவர் குமா ரத்தியை மணந்து இல்லறம் நடத்தத்துணிந்துள்ளேன். அம் மொழியினின்றும் சிறிதும் தவறேன். இது சத்தியம்" என்று பல நீதிமொழிகளை எடுத்துரைத்தார். அதைக்கேட்டதும் அத் தளர் நடைபருவத்தாள் பனிக்கட்டியைக்காட்டிலும் பளபளப்பு வாய்ந்து பதினேழுவயதுக்குரிய வடிவினளாய்த் தோன்றி "தூயவரே! நமது விருப்பத்தின்படியே அம்முனீந்திரரின் குமாரத்தியை மணஞ்செய்து வாழ்வீராக. யான் வடக்குத் திசைக்குரிய தேவதை. நுமது மனதைச் சோதிக்கவே இவ் வாறு நடந்துகொள்ளலாயினேன்" என்றாள்.

பிறகு அஷ்டாவக்ரர் நிகழ்ந்த வரலாற்றை வாதான்யரிடங் கூறி அவர் புதல்வியாகிய ஸுப்ரபையை வேத விதிப்படி வேள்வித் தீயின் முன் மணஞ்செய்துகொண்டு இல்வாழ்க்கையில் நகமும் சதையும்போல் மனமொத்து வாழ்ந்துவந்தார்கள்.

இக்காதை மாபாரதம் அநுசாசன பருவத்தில் நிகழ்ந்து விளங்குவது. இதன் உள்ளுறைப் பொருளை அடுத்த சஞ்சிகையில் விளக்குவாம்.

———:0:———

ஒளவை அனுபவங்கள்.

[லால்குடி சே. கந்தசாமி, ஆசிரியன்—குடியாத்தம்.]

சோலே! சோலே!! காவேரியையடுத்த, இரமணீயகரமான எழில் வாய்ந்த சோலே!!! பல வர்ணங்களிலகுறும் பட்சிகளுக்கு வாசஸ்தானமாயுள்ள வனப்பு வாய்ந்த சோலே!!!!

அச்சோலேயில், ஒருநாள் மாலே சுமார் நான்கு மணிக்கு ஒரு மனிதன் தனியாய் நடந்து கொண்டிருந்தான். அவன் சுமார் இருபத்தியேழு, அல்லது, ஒன்றிரண்டு குறைவு ஆன வயதுடையவன். அவ்விளேஞன் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டும், அடிமேல் அடி வைத்துக் கொண்டும் நடந்து சென்று கொண்டிருந்தான். அதைப்பார்த்திருந்தால், 'ஓராழ்ந்த யோசனையுடன் ஏதோ தகாத காரியம் புரியச் செல்லுகிறுன்' என்று தோன்றுமல் இருந்திருக்காது.

அவ்விதம் போய்க்கொண்டிருந்த அன்னவன், கடைசியில் ஒரு மேட்டினருகிற் போய் நின்றுன். அவன் யாண்டு நின்றனனே ஆண்டு ஒரு உயர்ந்த மரம் இருந்ததைக் கண்டான். உடனே அவ்வாலிபன் மனத்தில், நாடிவந்த காரியத்தைச் செய்வதற்கு அதுவே ஏற்ற இடம் என்றுபட்டது. தான் செய்யப் போகிற திருட்டுக் காரியத்தை யாராவது கவனிக்கிறுர்களோவென்று, நான்கு புறங்களேயும், கண்களுக்கெட்டிய தூரம் வரையில், எம்பிப்பார்த்தான். அப்போது, அவன் கண்களுக்கு

ஒருவரும் புலப்படவில்லை. ஆகவே, அவன் தான் ஏற்கனவே மறைத்துக் கொண்டுவந்திருந்த ஒரு நீண்ட கயிற்றைக் கையில் எடுத்துக் கொண்டான். "ஏ பூமாதேவியே! இன்றுடன், உலகத்தில் மிகுந்த வறுமையால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவனுடைய பாரம் உனக்குக்குறைந்தது;"—என்று சொல்லிக் கொண்டே, 'பக்கத்திலிருந்த கொய்யாமரத்தின் கிளையில் கயிற்றை மாட்டவேண்டும்' என்ற யோசனையுடன், அதனைத் தூக்கி எறிந்தான்.

இரண்டல்லது மூன்று முறைகள் எறிந்தும், கயிறு, கிளையில் மாட்டிக் கொள்ளவில்லை. அதைக் கண்ட அவ்வாடவன், "ஐயோ! நான் செய்த பாபந்தான் எப்பேர்ப்பட்டதோ?—அறிகிலேன். மகா அதிர்ஷ்ட ஈனனான என்னை ஏற்றுக்கொள்ள இம்மரமும் மறுக்கின்றதே!"—என்று வருத்தப்பட்டான். தன் காரியம் ஈடேற என்ன செய்வதென்று தெரியாமல் சற்று நேரம் நின்று கொண்டிருந்தான். பிறகு, சட்டென்று ஒரு எண்ணந்தோன்ற, தான் வைத்திருந்த கயிற்றைப் பின்னி நான்கு முழம் நீளம் ஆக்கிக் கொண்டான். தாவடமாகப் போட்டுக் கொண்டான். வலது பக்கம் தொங்கிக் கொண்டிருந்த நுனியை இடது கையிலும், மறு நுனியை மறுகையிலும் பிடித்துக் கொண்டான். "தேன் கமழ் கடுக்கை வேணிச் செல்வனே! திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளே! கடைசியில், என் ஆவி அகலப் போகின்ற இச் சமயத்தில், உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன். தெரிந்தும் தெரியாமலும் நான் செய்திருக்கக்கூடிய பாபங்களை மன்னித்து என்னை ஆண்டருளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். ஏ தேஜோ மயானந்தமே! நிலையில்லாத இவ்வுடலை நிலை என்று நம்பி மோசம் போய்விட்டேன். மைதீட்டிய கண்களினால் மனதைக் கவரும் பெண்களின் சுகமே மெய்யான சுகம் என்று ஏமாந்தேன். மாடிவீடே சுவர்க்கம் என்று மயங்கி, ஆறு இடு மடுவும் மேடும் போன்ற செல்வத்தை வளர்த்து வந்தேன். நல்ல குணங்களை எல்லாம் போக்கிலே போகவிட்டேன். ஆகையினால், என்மேல் கிருபை செய்து என்னைக் கரை ஏற்ற வேண்டும்;"—என்று வேண்டிக்கொண்டான். பிறகு, தான் கையிற் பிடித்துக் கொண்டிருந்த இரு நுனிகளையும் இழுத்துத் தற்கொலை செய்து கொள்ள ஆரம்பித்தான்.

அந்தச் சமயத்தில் அவனுக்குப் பின்னல் 'தட—தட' வென்று ஒரு ஓசை உண்டாயிற்று. அடுத்த நிமிஷத்தில் 'பொறு!—பொறு!!' என்று கத்திக் கொண்டே ஒரு கிழவி ஓடிவந்தாள். "குழந்தாய்! நீ என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? சுகமாய் ஜீவித்திருக்க வேண்டிய இக்காலத்தில், தற்கொலை செய்து கொள்ளும்படியான கஷ்டம் என்ன நேர்ந்தது?" என்று அன்னையைக் காட்டிலும் அன்புடன் கேட்டாள்.

அவ்வாடவன், தன் காரியம் தடைபட்டதைக் கண்டு வருத்தமுற்றனனுனும், தன்னருள் கொண்ட பாட்டியைப் பார்த்ததும் கொஞ்சம் சமாதானம் அடைந்து, "பாட்டி! எல்லாம் அறிந்த உங்களுக்கு நான் என்ன சொல்லப் போகிறேன்! என் மனம் எப்படி அல்லலுறுகின்றது என்று சொல்ல என்னல் முடியவில்லை. இவ்வுலகத்தில், இனி எனக்கு என்ன சுகம் உண்டாகப் போகிறது? எப்போது, இருந்த ஐஸ்வர்யத்தை இழந்து, வறுமையை அடைந்தேனே அப்போதே சிறுமையும் என்னைத் தேடி வந்தடைந்தது. இது வரையில் என் வார்த்தைகளுக்கு மதிப்புவைத்து அதைக் கேட்டவர்கள், இப்போது, நான் ஒரு செய்தி சொன்னல் கேட்கவும் மாட்டேன் என்கிறார்கள். அவர்கள் மறுவசனம் தருவதும் பகீரதப் பிரயத்தனமாயிருக்கின்றது. என்னைப் புகழ்ந்தவர்கள் இகழ ஆரம்பித்துவிட்டனர். வறுமை, என் வீரத்தையும், தைரியத்தையும் ஆகாரமாக அருந்திவிட்டது. அதனல் செல்வரைக் காணவும், செய்ய சபையில் செல்லவும் வெட்கமாயிருக்கிறது. ஒரு விருந்து எதிர்பார்த்த நான் விருந்தைக் கண்டதும் செத்த பிணம் ஆகின்றேன். இவையெல்லாம் போகட்டுமென்றால், நான் சொல்லும் நல்ல வார்த்தைகளும் பொல்லாத வசனங்களாய் முடிகின்றன. தொலையாத விசாரத்திற்கு உள்ளாகிவிட்டேன். மனையாட்டி கூட எண்ணுது ஏச ஆரம்பித்துவிட்டாள். கைபிடித்த காரிகைதான் அவ்வாறென்றால் பத்து மாதம் சுமந்து, எவ்வளவோ அருமையாகப் பெற்றெடுத்த தாய்கூட பழுதுகூறத் துவக்கிவிட்டாள். ஆகையினல், அருமைப் பாட்டியாரே!—எனக்கு உலகம் அறவே சலித்துவிட்டது. எம்பெருமான் பாதார விந்தங்களைச் சார்ந்தாவது சுகமுறலாம் என்றெண்ணி இக்காரியத்தில் பிரவேசித்துவிட்டேன். ஆகையினல், என்னைத் தாங்கள் தயவுசெய்து தடுக்கவேண்டாம்;"— என்று வைராக்கியத்துடன் சொல்லி முடித்தான். (தொடரும்.)

[ஜோலார்பேட்டை ரயில்வேஸ்கூல் டீசர்
நா. கிருஷ்ணசாமி ஐயர் எழுதியது.]

தர்மபோதினி ஆவணி-மீ சஞ்சிகை 159-ம் பக்கத்தில் கண்ட கணிதவினுக்கு விடை.



○ கணக்கர் ● கள்ளர்

கவி.

கணிதரும் நால்வரப்பா, மாய்ந்திடும் கள்வரைவர்,
பெருமைமிகு கணக்கரோரிருவர், பின்புசேர் கள்வ
[னொருவன்
அந்தமிகு அறிவோர் மூவர், அமர்ந்தசொல்ப்பாவி
[யொன்று
குணமுடன் குணிதர் ஒருவர், விரவிய வீணரிருவர்
உடன்சேர் ஜோதிடர் இரண்டுபேர்தான், பகையோர்
[மூவரும் சேர்ந்து நிற்க
கணிதன் ஒருவனும் கள்ளரும் இருவராக லக்கரும்
[இருவர்நிற்க
மாண்டிடும் கள்வனொருவன் எஞ்சியே நிற்பன்தானே.

குறிப்புகள்.

மகாத்மா காந்தியின் உபவாசம்:—சமீபத்தில், இந்தியாவில் பல பாகங்களில் ஏற்பட்ட ஹிந்து முஸ்லீம் சச்சரவுகள் மகாத்மா காந்தியின் உள்ளத்தைத் தளைத்துவிட்டன. குல்பர்க்கா, கோஹட் முதலிய ஊர்களில் இருவகுப்பினரும் செய்த அட்டூழியங்களைக் கேட்டு அவருடையஇளகிய மனம் புண்பட்டுத் தம் நாட்டினர் அறிந்தோ அறியாமலோ செய்த அக்கிரமங்களுக்குப் பிராயச்சித்தமாக, அம்மகான் திடீரென்று சென்ற செப்டம்பர் மாதம் 18-உ முதல் 21 நாள் உபவாசமிருக்கத்துணிந்து விரதம் செய்ய வாரம்பித்தார். உப்புடன் கலந்த ஜலத்தை மட்டும் பருக அவர் ஒத்துக்கொண்டார். அவருடைய அத்தியந்த நண்பருக்கும் இது திடுக்குறச்செய்தது. எத்தனையோ நேயர்கள் மன்றாடிக்கேட்டும் அவருடைய மனவுறுதி தளரவில்லை. அவருடைய நண்பர்களான ஹக்கிம் அஜ்மல்கானும் மௌலானா மகம்மதாலியும் இத்தேசத்திலுள்ள அநேக மதத்தலைவர்களுக்கு ஒரு மகாநாட்டுக்கு வந்து, ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு வேண்டிய மார்க்கங்களைத்தேட அழைத்தார்கள். ஹிந்துத் தலைவர்களான மதன மோகன மாளவயா, பண்டித மோதிலால் நேரு, ஸி. ஆர். தாஸ், ஸ்வாமி சிரத்தானந்தர், ஸி. ராஜகோபாலாசாரியார் முதலானோரும், மகம்மதியத்தலைவர்களான, அலி சகோதரர்களும், அப்தல்கலாம் ஆஸத் முதலானோரும் விஜயம் செய்தார்கள். அநேக கிருஸ்தவ மதஸ்தர்களுக்கும் அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டன. எனவே, ஸ்டேட்ஸ்மன் பத்திராதிபரும், மெட்ராபாலிடன் எனப்படும் கல்கத்தாவிலிருக்கும், கிருஸ்தவ மதாசாரியரான டாக்டர் வெஸ்டுகாட் என்பவரும் மகாநாட்டிற்கு வந்தார்கள். அம்மகாநாட்டில், அநேக தலைவர்களும், மதத்தலைவர்களும், உத்தியோகப்பற்றற்ற அநேக பிரமுகர்களும் கலந்து அநேக தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். கிருஸ்தவப் பாதிரியார் கூறிய பிரகாரம், முதலில் இருமதத்தாரும் விட்டுக்கொடுக்க இஷ்டப்படாது பிடிவாதத்துடனிருந்தாலும், ஒன்றிரண்டு நாள் பொறுத்து, அவர்களுள் சமரசப்பான்மை யேற்பட்டது. எனினும், தீர்மானங்களைப் பேசுவதிலும், வாக்குவாதங்கள் புரிவதிலும், வெகு தைரியமாகவும், நிர்த்தாக்ஷண்ணியமாயும் அவர்கள் நடந்துகொண்டார்கள். அம்மகாநாட்டிற்குத் தலைவராக பண்டித மோதிலால் நேரு நியமிக்கப்பட்டார். அம்மகாநாட்டின் முதல் தீர்மானம்,

மகாத்மாகாந்தி தம் உபவாசத்தை முடித்துக்கொள்ளவேண்டுமென்பதே. அக்கிராசனர், அத்தீர்மானத்தை மகாத்மாவிடம் கொண்டு, என்ன வற்புறுத்தியும் அவர் உபவாசத்தை நிறுத்தச் சிறிது மிணங்கவில்லை. கடைசியில், அவருடைய வைத்தியர்கள், எப்போது ஜீவஹானி ஏற்படக்கூடிய நிலைமையிலிருப்பதாக அறிவிக்கிறார்களோ, அது முதல், மறுபடியும் உணவருந்துவதாக அவர் கூறினார்.

தினே தினே, அவருடைய மெலிந்த வுடல் மென்மேலும் மெலிவுற்றது. ஆனால் அவருடைய பிரஸன்ன முகத்தில் மட்டும் மாறுதலேது மேற்படவில்லை. தினந்தோறும் அரைமணி நேரம், கைராட்டினத்தையுபயோகித்து நூல் நூற்பதை நிறுத்தவில்லை. தமது பத்திரிகையாகிய 'யங் இந்தியா'வில் பிரசுரிக்கப்படவேண்டிய விஷயங்களை யெழுதாமலிருக்கவில்லை. ஆனால் வைத்தியர்கள் அடிக்கடி, ஜனங்கள் திரள்திரளாக வந்து அவருக்கு அனுவசியமாக ஆயாஸமேற்படுத்துவதற்கு விடவில்லை. தேசமெங்கும், ஜனங்கள் நம் தலைவர் இக்கொடிய விரதத்தைச் சரியாக நிறைவேற்றத்தக்க, பலம் அவருக்கநுக்கிரகிக்கும்படி கடவுளை வேண்டினார்கள். கருணையுள்ள பகவான் திருவருளினால், யாதொரு கஷ்டமுமில்லாமல், மகாத்மாகாந்தி அக்டோபர் மாதம் 8 உ யாகிய புதன்கிழமை சுமார் 12 மணிக்குத் தம் பிரிய நண்பர்கள் முன்னிலையில், ஹிந்து, முகம்மதிய கிருஸ்தவ சம்பிரதாயங்களின்படி, சம்ஸ்கிருத, அரேபிய, இங்லீஷ் பாஷைகளில், ஸ்தோத்திரங்களைச் செய்தானபின், ஒரு கோப்பையில் ஆரெஞ்சு ரஸத்தை யுண்டு, 21 தினத்து உபவாசத்தை முடித்தார். உபவாச விரதாதிகளைச் செய்வதிலும், கடவுளைக்குறித்துப் பூஜைகள், ஸ்தோத்திரங்கள் முதலியன செய்வதிலும் யாதொரு பிரயோசனமும் ஏற்படுவதில்லை யென்ற மூட நம்பிக்கை யிருந்து வருகிற இக்காலத்தில், மகாத்மாகாந்தி, சேர்ந்தாப்போல் 21 நாள் உபவாசமிருந்து கடவுளைக் குறித்து ஸ்தோத்திரம் செய்ததன் பலனாக, டெல்லி நகரில், இதுவரையில் காணப்படாத அந்நியோன்ய பாவத்துடன் மகாநாட்டில் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் பிறமதத்தோரும் கூடி, ஒற்றுமையேற்படுத்தவல்ல, அநேக, மார்க்கங்களைக் கண்டுபிடித்தது எல்லோருக்கும் புத்துயிரளிக்குமென்பதிற் சந்தேகமுண்டோ?

ஸ்ரீராமஜெயம்.

பிரம்ஹஸ்ரீ சிறுகுமணி சுந்தரேச சாஸ்திரியார் அவர்களால் சென்ற ஒருமாத காலமாக தர்மபுரியில் ஸ்ரீமத் ராமாயண ப்ரசங்கம் நடைபெற்று வந்தது. சாஸ்திரியாரவர்கள் வால்மீகி ஸ்லோகங்களையும் கம்பர் கவிகளையும் இன்னிசையுடன் ஏற்றவாறு எடுத்துரைத்து சொன்னயம் பொருணய நிறைந்த தெள்ளிய தமிழில் விசேஷ பக்தியுடன் சொற்பொழிவாற்றினர். இக்காலக்ஷேபம் சென்ற விஜயதசமியன்று ஸ்ரீராம பட்டாபிஷேக மஹோற்சவத்துடன் செவ்வனே முடிவுபெற்றது.

*　　*　　*　　*　　*

தர்மபுரியினின்றும் மேனாட்டுச் சுற்றுப் பிரயாணஞ்செய்து வந்த மிட்டா ஜமீன்தார் Mr. M. G. நடேசசெட்டியாரவர்களுக்கு நமது நல்வரவு கூறுகிறோம்.

*　　*　　*　　*　　*

மகா-ா-ா-ஸ்ரீ M. G. நடேச செட்டியாரவர்களை அக்ராசனராகக்கொண்ட "தர்மபுரி க்ளப்" என்னும் பொது ஜன உபகாரச்சபை தர்மபுரியிற் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பொதுஜனங்களுள் சமரஸப்பான்மையை விருத்திசெய்து பல துறைகளிலும் சமூக முன்னேற்றத்திற்கான காரியங்களைச்செய்யும் நோக்கங்கொண்டுளது. சபை நீடூழிவாழ்ந்து நற்பயனளிக்குமாறு இறைவன் அருள்புரிவாராக.

———:0:———

மதிப்புரை

இஹபரஸாதகம்

[ஆசிரியர் :— க.ரா. சு. சேஷகிரி ஐயர் எழுதியது.]

'இஹபரசுகம்' எனும் இவ்வரிய திரட்டில், பல்வேறு தேசங்களில் வெவ்வேறு காலங்களில் அவதரித்து அஞ்ஞானத்திற் றோய்ந்திடு சாகரத்தினின்றும் அனைவரையும் உய்ப்பித்து, பேரானந்தத் துய்த்துவித்த பற்பல மதாசாரியார்கள், மஹாத்மாக்கள் திருவாய் மலர்ந்தருளிய வேதாந்தாசாரமொழிகள் அஹிம்சா சுத்தம் முதலிய பன்னிரு தலைப்பின்கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் இதனைப்படிப்பின் அறம் பொருள் இன்பம் வீடு பயக்கப்பெறுவர் என்பது நிச்சயம்.

மதிப்புரை.

"ஆரோக்கிய தீபிகை."

இல்வாழ்வை இன்பமாக நடத்தி வருவதற்கு அவசியமான பல சுகாதார ஆரோக்கியமுறைகளைத் தமிழ் நாட்டினருக்குப தேசித்து வரும் இவ்வருமையான மாதாந்த சஞ்சிகையின் நடை முதல் மாதத்திய இதழ் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. சரீராரோக்கியத்தைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியமும் அதனைக் காப்பாற்றும் மார்க்கங்களும் அடங்கிய பல அரிய வியாசங்கள் இந்த சஞ்சிகையில் அடங்கியிருக்கின்றன. முக்கியமாக குடியிருப்பு வீடுகளை சூரிய வெளிச்சம் நன்றாக வீசக்கூடிய நிலைமையில் அமைக்கவேண்டிய அவசியத்தைப்பற்றிய வியாசத்தைத் தற்கால நகர நிர்மாணிகள் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். மாணவர்களுடைய சரீர ஸ்திதியை சரியாகப் பாதுகாக்கும் முறைகளும் பல வியாசங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சரீரப் பயிற்சியின் அவசியமும் தகுந்த ஆதாரங்களுடன் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஆகாரத்தை உட்கொள்ளவேண்டிய மார்க்கத்தைப்பற்றி இந்த சஞ்சிகையில் குறிப்பிட்டிருக்கும் முறைகளை நமது சகோதர, சகோதரிகள் பின்பற்றி நடந்தால் பல வியாதிகளிலிருந்து தப்பித்துக்கொள்ளக்கூடும். இதிலடங்கியுள்ள எல்லா வியாசங்களும் அறிவை வளர்க்கக்கூடியவைகளாக இருக்கின்றன. சித்திரப் படங்களுடன் கூடிய இந்த மாதாந்த சஞ்சிகையின் வருட சந்தா ரூபா 1-8-0 தான். வேண்டுவோர் சென்னை தம்பு செட்டித்தெரு, 323-ம் நம்பர் கட்டடத்திலுள்ள இந்தப் பத்திரிகையின் காரியாலயத்திற்கு எழுதி சந்தாதாரராகச் சேர்ந்துகொள்ளலாம்.

தனபாலன் அல்லது விஷக்கத்தி.

ஒரு இனிமையான, சிறுவர்களுக்கான, சிறந்த கதைப் புத்தகம். பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்கு என்றே குழந்தைகளுடன் அதிக நாள் பழகிய ஒரு அனுபவமிகுந்த உபாத்தியாயரால் எழுதப்பட்டது. ஒவ்வொரு மாணவ மாணவியும் வாங்கி வாசிக்கத்தக்கது. பரீக்ஷாகாலங்களில் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளைக்கொண்டு நடித்தல் காட்ட இதனைப்போலத் தக்கது ஒன்றுமில்லை என்றே நம்பலாம்.

விலை புத்தகம் ஒன்றுக்கு அணு இரண்டுதான்.

(உபாத்தியாயர்களுக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.)

Apply to **L. S. K. SAMI.**
C/o தர்மபோதினி ஆபீஸ், தர்மபுரி, (சேலம் ஜில்லா)

கற்பகம்.

ஓர் செந்தமிழ் மாத சஞ்சிகை.

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், வைத்தியம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், இராஜாங்க விஷயம், ஜனசக சீர்திருத்தம், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அநேக விஷயங்கள் வித்வத் சிரோன்மணிகளால் எழுதப்பட்டு வெளிவந்துலவுகிறது.

மானேஜர்,

"கற்பகம்" ஆபீஸ், புதுவை.

ஞான இரகசிய சிந்தாமணி.

—:0:—

[ஓர் அரிய வேதாந்த நூல்]

விலை அணா 8.

நாம் மானிட ஜன்மமெடுத்துள்ளது இறைவனையறிந்து முத்திபெறுதற்பொருட்டேயாம். அவ்விறைவனை அறிதற்கு வேதாந்த நூல்களே ஆராயத்தக்கனவாம். மனைவி மக்களுடன் எப்பொழுதும் அல்லற்பட்டு உழவாது இனியேனும் முத்தியாங்கரை சேர முயலவேண்டாவோ? இந்நூல் மோக்ஷமடைதற்குரிய வழியை நன்கு காட்டுகின்றது. பல வேதாந்த நூல்களைக் கற்றபலனை இவ்வொரு நூலின் மூலமாகவே அடையலாம். ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. வேதாந்திகளிடத்தும், தமிழபிமானிகளிடத்தும், நற்கதியை அடைய விரும்புவோரிடத்தும் இந்நூல் இருக்கவேண்டியதென்பதும், இவ்வொரு நூலே நன்னெறியைக்காட்டி வீடுபெறச்செய்யுமென்பதும் இந்நூலை வாசிப்போர்க்கு நன்கு விளங்கும்.

தனிப்பிரதி விலை அணா 8.

டஜன் பிரதிகள் ஒரேதடவையில் வாங்குவோர்க்கு ஒன்று இனாமாகக்கொடுக்கப்படும்.

வியாபாரிகள் நேரே எமக்கெழுதுக.

விலாசம் :—

ராமசுப்பிரமணிய நாவலர்,
ராமவிலாசம், பத்மநாபபுரம்,
தக்கலை போஸ்டு.

படங்கள்! படங்கள்!!

கார்டு சைஸ் படங்கள்.

தங்கள் தேவைக்கு விரைந்து எழுதுங்கள்.

இதுபோன்ற அழகிய லீலா விநோதப் படங்கள் யாரும் வரவழைத்திருக்கமாட்டார்கள். இந்தப்படங்கள் தனியாய் பாரிஸ் பட்டணத்திலிருந்து வரவழைத்திருக்கிறோம். வெகு நேர்த்தியாய் பார்ப்பவர் மனதைக் கவரும் வண்ணம் பளபளப்பும் கலரும் களரில்லாமலும் கூடிய கார்டு சைஸ் படங்கள்.

1 செ. டஜன் 1-க்கு 2—8—0. 2 செ. டஜன் 1-க்கு 2—0—0
3 செ. , 1—8—0. 4 செ. கலர் புஷ்பங்கள் குழந்தைகள் 1—0—0
பாக்கிங் போஸ்டேஜ் பிரத்தியேகம்.

விலாசம்: பி. எஸ். ராய், புதுவை.

இனாம்! இனாம்!!

கீழேகண்ட சாமான்களில் ஒன்றை வாங்குபவர்கட்கு

பாரிஸ் வாசனைபுட்டி 1, பவுடர் டப்பி 1, துணியில் வைக்கும் வாசனை பொட்ளம் 1, முகத்திற்கு போடும் கிரீம் புட்டி 1, ஆகிய நான்கு சாமான்களும் அடங்கின பெட்டி ஒன்று இனாம்.

மப்ளர் செண்டு ரூ 3—8—0	லேப்புளோர் ரூ 3—0—0
ஓக்ட் செண்டு ,, 3—8—0	எஸ்மி ,, 3—0—0

தீர்வை, பாக்கிங் போஸ்டேஜ், பிரத்தியேகம்.

இன்னும் அநேகவித செண்டுகள், சோப்புகள், பவுடர்கள் விலை சகாயமாய் சில்லரையிலும், மொத்தமாயும் கிடைக்கும். வேண்டிய தினுசுகளுக்கு விலை விபரத்திற்கு எழுதவும்.

ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் இரண்டுவித வாசனை கார்டுகள் இனாமாக அனுப்பப்படும்.

ஜி. எஸ். ஏஜென்ஸி, புதுவை.

தர்மவித்யா பிரைஸ் சீட்டு.

(தர்மபுரியில் சமஸ்கிருத இலவச பாடசாலை ஏற்படுத்த)

ரூ. 7500 ஐ 2050 பிரைஸ்களாக கொடுக்கப்படும்.

1925-ளு மே-மீ 20-உ பிரைஸ் துலுக்கப்படும்.

டிக்கட் 1-க்கு அணா 0—8—0.

தருமபுரியில் இலவச சமஸ்கிருத பாடசாலை ஏற்படுத்த திரவியம் சேகரிக்கும் பொருட்டு மேற்படி பிரைஸ் சீட்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் இதைக் கண்ணுறும் நேயர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய பந்துக்களுக்கும் சிநேகிதர்களுக்கும் சிபார்சுசெய்தும் டிக்கட்டுகளைப்பெற்றும் டிக்கட்டு புஸ்தகங்களை விற்றும் சேகர்த்த பணம் அனுப்பிக்கொடுத்து மேற்படி பள்ளிக்கூடத்தை ஏற்படுத்த தகுந்த உதவிபுரியுமாறு கோரப்படுகிறது

P. S. கிருஷ்ணன்,
மானேஜிங் டைரெக்டர்,
தர்மவித்யா பிரைஸ் சீட்டு, தர்மபுரி, சேலம் ஜில்லா.

புத்தகங்கள் புத்தகங்கள்

ஹிந்துக்களுக்கு மிக அவசியமான புத்தகங்கள்.

ஆசிரியர் :—மைலாப்பூர் **K. S.** சேஷகிரி ஐயர் எழுதியவை.

		ரூ.	அ.	பை
1.	மஹா பாரத வசனம் (முதற்பாதி) ...	1	0	0
2.	இஹபரசுகம் அல்லது 50 மஹாத்மாக்கள் ஞானிகளின் அமுத மொழிகள்	0	8	0
3.	'எல்லாம் நானே' அத்வைத உண்மையை விளக்கும் புத்தகம்	0	2	0
4.	உத்தம பத்தினிகள்...	0	2	0
5.	ஈஸ்வரலீலை (திருவிளையாடற் சுருக்கம்) ...	0	8	0
6.	உத்தம பக்தர்கள்	0	2	0
7.	'Dozen Weapons' in English. ...	0	8	0
8.	The 'Mahabartha' in English ...	0	10	0

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கெழுதுவதுடன் நமது போதினியின் பெயரையும் எழுதுமாறு கோருகிறோம்.

K. S. சேஷகிரி அய்யர்,
43, ந்யூஸ்ட்ரீட், மைலாப்பூர், மதராஸ்.

சஞ்சீவி பிரஸ், தர்மபுரி, சேலம் ஜில்லா.

நேர்த்தியான அச்சுவேலைகள்.

கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பாரங்கள் ரிஜிஸ்டர்கள் முதலியன உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு எக்காலத்திலும் எப்பொழுதும் ஆஜரில் கிடைக்கின்றன. விலை சாசமாய்க் கொடுக்கப்படும். தேவையுள்ளவர்கள் மேற்படி விலாசத்திற்கு ஆர்டர் செய்யவேணுமாய் கோரப்படுகிறது. டிஸ்டிரிக்ட் முன்சிபு கோர்ட்டு பாரங்கள் :—வக்காலத்து, படிமிமோ, நக்கல்மனு முதலிய சகலவித பாரங்களும், வில்லேஜ் முன்சிபு கோர்ட்டு, பஞ்சாயத்து கோர்ட்டு இவைகளுக்குத் தேவையான சாக்ஷி சம்மன், பிரதிவாதி சம்மன், டிக்ரி நிறைவேற்று மனு முதலியவைகளும், எலிமெண்டரி பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான மாதாந்திர வருஷாந்திர கணக்கு பாரங்கள் (Monthly and annual return forms,) பையன்கள்—உபாத்தியாயர்கள் தினசரி குறிப்பு ரிஜிஸ்டர்கள் (Boys and Masters' Attendance Registers). கோவாபரேடிவ் சொஸைடிகளுக்குத் தேவையான ரிஜிஸ்டர்கள், பாரங்கள், புத்தகங்கள், பத்திரிகைகள், நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும் தமிழிலும் சீக்கிரமாகவும் சாசமாயும் செய்து தரப்படும். புக்பைண்டிங் முதலிய வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மானேஜர் சஞ்சீவி அச்சுக்கூடம்
தர்மபுரி.

விஷயதானம் செய்வோர் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

---

1. வியாசங்கள் அரை கடுதாசியில் பாதி இடம்விட்டு எழுதப்படவேண்டும். எழுத்துகள் தெளிவாயிருக்கவேண்டும்.

2 பிரதி இங்கிலீஷ் மாதமும் 10-உக்குள் கிடைக்கும் வியாசங்களை அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்க ஏற்பாடு செய்யப்படும்.

3. கிடைத்த வியாசங்களைப் பிரசுரிக்கவும், விஷயங்களைச் சுருக்கவேண்டிய இடங்களில் சுருக்கியும், மாற்றவேண்டிய இடங்களில் மாற்றியும் பிரசுரிக்கும் சுதந்திரம் பத்திராதிபருக்குண்டு.

4. பிரசுரிக்கப்படாத விஷயங்களை வாபஸ்பெற விரும்புவோர் தபால்பில்லைகளை (Postage stamps) அனுப்பவேண்டியது.

சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

---

1. சந்தாதாரராகச் சேர விரும்புவோர் சந்தாவை மணி ஆர்டர் மூலமாக அனுப்பி சஞ்சிகையைப்பெறுவது உசிதமானது.

2. இடமாறுதல்களை உடனுக்குடனே பத்திராதிபருக்கு தெரிவித்துக்கொண்டால் சஞ்சிகையை அவ்விலாசத்திற்கனுப்பப்படும்.

3. கடிதமெழுதும்போது அவர்களுடைய சந்தா நெம்பரையும் அதில் குறிப்பதுடன் பதிலை எதிர்பார்ப்போர் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

4. சஞ்சிகை பிரதிமாதமும் 1-உ அனுப்பப்படுமாகையால் சஞ்சிகை சேராதசந்தாதாரர்கள் 10-உக்குள் தெரிவிக்கவேண்டும்

5. 12 சந்தாதாரர்களை சேர்த்துக்கொடுக்கும் நேயர்களுக்கு ஒரு வருஷத்திய சஞ்சிகை இனாமாக அனுப்பிவைக்கப்படும்.

பத்திராதிபர்.

உ

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை.

இப்பெயர்கொண்ட செய்யுள் நூல் தலைவாய்ப்பேட்டை அரங்கனாத கவிராஜராலியற்றப்பட்டுச் சமீபத்தில் வெளிவந்துள்ளது. இதில், அர்ச்சுனன் தீர்த்தயாத்திரைச் சிறப்பு, மும்மணமாண்பு, முருகன் பெருமை, நதி, கடல், மலை, நாடு ஆகியவற்றின் சிறந்த வருணனை முதலியன மிக நன்றாகக் கூறப்பட்டுள்ளன. இதனைப் படிப்போர் பழந்தமிழ் நூல் எனவே இதனைக் கூறுசிற்பர் என்பது முற்றுந் தோற்றமாம். 1500 செய்யுள்கொண்ட இந்நூலின் விலை ரூபாய் 1—4—0 தான். ஒரேசமயத்தில் 12 பிரதிகள் வாங்குவோருக்கு ரூ 1 வீதம் தரப்படும். வேண்டுவோர் கீழ்குறித்த விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

இங்ஙனம்,
பண்டித ரா. திம்மப்ப ஐயர்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர் முனிசிபல் காலேஜ்
வீரபத்திர சுவாமி கோயில் தெரு சேலம்.

Tel Address—"KADARSTORE."
தந்திவிலாசம்—"கதர் ஸ்டோர்."

அசல் கதர் ஜவுளிகள்!

எங்களிடத்தில் சொந்தபார்வையில் தயார் செய்த வேஷ்டிகள், ஷர்டிங் கோட்டிங் சிறுசுகளும், சீட்டி துணிகளும், பலவித கலர்களில் ஓரங்களில் சரிகை, பட்டுக்கரை மூலைகள், சாதா வெள்ளை மூடி அங்கவஸ்திரங்கள், சேலம் சிறுசு பட்டு சரிகைகளால் செய்த பட்டுக்கரை வேஷ்டிகளும், நூலினால் செய்த பட்டுக்கரை வேஷ்டிகளும், துண்டுகளும், சேலைகள், ரவிக்கைகள், தலைப்பாக்கள், தொப்பிகள், ஷால்வைகள், கைக்குட்டைகள், கொட்டை, சாதா துண்டுகள், லுங்கி சிறுசுகள், இன்னும் அநேக ரகங்களில் கிடைக்கும். வியாபாரிகளுக்கு விலை மிக்க சகாயம்.

N. கோவிந்தராவ், கதர் ஸ்டோர், ஈரோடு.

Printed and Published by P. R. Srinivasan at
the Sanjivi Press, Dharmapuri.